சிவமயம்

குமரகுருபரன்

த 3113

மலர் 24] 1973-௵ மார்கழி ௴ 1-௳ (16–12–73) [இதழ் 12

தனிப்பிரதி 25 பைசா வருடச் சந்தா ரூ. 3-00

ஆசிரியர் குழு.

1 திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்.
காசிச் சர்வகலாசாலை, காசி.

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர். சென்னை-86

5. திரு. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம். மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை
கௌரவ நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

		பக்கம்
1.	திருவுந்தியார்-உரை விளக்கம் ...	557
2	அருள்மொழி அமுது ...	560
3.	நாதன் ஒருவனே! ...	566
4.	எளிவந்தபிரான் —	574
5.	பெரியாரைக் காணுதல்	578
6.	வாதவூர் அடிகள் உழைக்காது வேண்டும் ஊதியம் ...	584
7,	அறிவின் மாட்சி ...	589
8.	வேடதாரி	594
9.	நீலப்பாடி அத்திப்புலியூர் பள்ளி மாணவர் மதிய உணவு வசையறு நிதி ரூ. 5.500 ...	599
10.	திருவலஞ்சுழி சுவேத விநாயகர் பச்சைக் கற்பூரம் லேவது அபிஷேக நிதி முதற் பொருள் ரூ. 1,500 ...	601
11.	மூன்ரும் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை	87 38

T-UN-438

திருச்செந்திலாண்டவன் துணை

"குமரகுருபரன்" திங்களிதழ்

சந்தாதார்களுக்கு ஓர் அறிவிப்பு

"குமரகுருபரன்" திங்களிதழ் இருபத்திநாலு ஆண்டுகளாகச் சைவமும் தமிழும் பரப்பி வருவதை வாசகர்கள் நன்கு அறிவர். காகித விலை உயர்வு, அச்சியற்றும்செலவு, சிப்பந்திகள் சம்பள உயர்வு முதலாகிய தவிர்க்க முடியாத காரணங்களால்1974ம் வருடம் சனவரி மாதம் முதற்கொண்டு அதாவது பிரமாதீச ஆண்டு தை இதழ் முதற்கொண்டு குமரகுருபரன் இருபத்தைந்தாவது மலர் ஆண்டுச் சந்தாவை ரூபாய் 3-00 மூன்றிலிருந்து ரூபாய் **5-00** ஐந்து ஆக உயர்த்தப் பெற்றிருக்கிறது. சந்தா நேயர்கள் புதிய விகிதத்தில் சந்தாவைச் செலுத்திக் 'குமரகுருபரனை" ஊக்குவிப்பதோடு சந்தாப் பாக்கியுள்ள நேயர்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்ப வேண்டுகின்றோம்.

கௌரவ நிர்வாக ஆசிரியர்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

நாளிது மார்கழி மாதத்துடன் "குமரகுருபரன்" இருபத்துநான்கு ஆண்டுகள் நிரம்பி தைத்திங்கள் முதல் இருபத்தைந்தாவது ஆண்டு எய்துகிருன். தங்களுடைய அன்பும், ஆதரவும் என்றென்றும் பெருகி நிற்கப் பெரிதும் விழைகின்ருன்.

சந்தாப் பாக்கியுள்ளவர்கள் பாக்கியை அனுப்புவதுடன் 1974-ஆம் வருடப் புதிய சந்தாவையும் சேர்த்து அனுப்பிக் "குமரகுருபரன்" வளர்ச்சிக்கு மேன்மேலும் ஊக்கமளிக்க வேண்டுகின்றேன். சந்தாப் பாக்கியில்லாத நண்பர்கள் வழக்கம்போல் 1974 ஆம் வருடப் புதிய சந்தாவை முன் கூட்டியே அனுப்பித்தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

சந்தா நம்பர் குறிப்பிட்டு எழுதுவதும், முகவரி மாற்றம் உடனுக்குடன் தெரிவிப்பதும், பத்திரிகை கிடைப்பதில் காலதாமதத்தை அகற்றி அலுவலகத்தின் சேவையைத் துரிதப் படுத்தும். புதுச்சந்தாதார்கள் '**புதிய சந்தா**' என்ற விபரம் குறிப்பிட்டு எழுதுவது நலம்

கௌரவ நிர்வாக ஆசிரியர்:

உ

திருச்செந்திலாண்டவன் துணை

"குமரகுருபரன்"

இருபத்திநான்காவது மலரின் பொருளடக்கம்

பொருள்	பக்கம்
அருள்மொழி அமுது	317, 365, 435, 469, 525, 560
அடியார் பூசையே அரன்பூசை ...	70
அடியவரை வாழ்வித்த செந்தில் வடிவேலன் அபரசுப்ரமண்ய ஞானசம்பந்தராய் அவதரித்து ஆற்றிய அரும்பணிகள் ...	444
அபிராமிபட்டர் ஓர் ஆய்வு	242, 480
அரிசில்கரைப்பூத்தூரில் புகழ்த்துணைநாயனுர் நினைவு சிவாச்சாரியார் படிக்காசு நிதி முதற்பொருள் ரூ. 6,000 ...	131
அன்னையின் மாண்பு ...	380
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே ...	447
அறிவின் மாட்சி ...	589
ஆறும்ஊரும் ...	119
ஆணவம் ...	169
ஆலய நிர்வாகிகளே! அசந்துவிடாதீர்கள்! ...	518
இதுவோ எமை ஆளும் ஆறு?	84, 336
இறையனுர் அருளிய அகப்பொருள் நூலிற்குப்பொருள் ...	156
இராமேசுவரத்தில் நித்தியப்படி அன்னம்பாலிப்பு நிதி ரூ. 5,000 ...	178
இடிந்தகரை பள்ளி மாணவர் மதிய உணவு உதவி நிதி ரூ. 5,000 ...	264
இறை அன்பு ...	491
இறையருள்பெற பனைசைபுராணம் ...	532
இராமேசுவரத்தில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள் நினைவுநாள்...	552
உழைப்பின் பயன்காட்டும் உத்தமத் திருநாள் ...	167
உடன்தோன்றினராய்	220, 254, 292
உடம்பொடு உயிரிடை ...	377
உமையாள் பயந்த இலஞ்சியம் ...	538
எப்போது இடர் தீரும் ...	42
எங்கே பண்பு ...	290
எளிவந்தபிரான் ...	574
கடவுள் வேண்டுமா? ...	67

கவிஞனின் ஏக்கம் ... 104
கரையேற விட்ட முதல்வன் ... 108
கற்சிலைக்குக் கற்பூர ஆரத்தியா ... 158
கடவுளுணர்ச்சி ... 172
கப்பலில் ஏறிய கடல்! ... 330
கருணை உள்ளம் ... 474
ஸ்ரீ காசியாத்திரை ... 1
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய காசிக்கலம்பகம்
உரைநடை 15, 95
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள்
நினைவு ஆலங்குடி ... 179
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள் நினைவு
சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை ... 224
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள் நினைவு
சீர்காழி ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் சிறப்பு வழிபாடு ... 308
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கட்கு 11. 6. 73ல்
திருப்பனந்தாளில் வரவேற்பும் வழிபாடும் ... 323
ஸ்ரீ காசிமடத்தின் சார்பில் திருவாதவூரில் ஆனி மகவிழா ... 369
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கட்கு
இராமேசுவரத்தில் வரவேற்பு மடல் ... 388
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள்
இராமேசுவரத்திற்கு எழுந்தருளல் ... 390
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள் நினைவுநாள்
காசியில் பண்டார உதவிநிதி ... 405
ஸ்ரீ காசிமடம் 21ம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீவைகுண்டத்துக்கு எழுந்தருளல் ... 432
காஞ்சிச் சிவாலயங்கள் 78, 206, 249
கி. வா. ஜகந்நாதன் கவிதை ... 531
கொடுங்கூற்று என்செயும்? ... 397
குமரகுருபரன் இருபத்திநான்காவது ஆண்டுமலர்
தோற்றுவாய் ... 1
குமரா, முருகா, குகா! ... 546
குறிக்கோள் ஒன்று-வழிகள் இரண்டு ... 427
சகலகலாவல்லிமாலை [உரைநடை] 141, 188
சிற்றுயிர்க்கு உற்றதுணை ... 98
சேனைத்தலைவன் ... 303
சைவம் வளர்த்த தமிழ் ... 164
சைவமங்கையர் ... 301

சைவசமயமும் சித்துகளும் ... 439
மதுரையின் மாண்பு 26, 126, 153, 192. 237. 269
மன்னு உயிர்களின் மன்னிய அருட்குரு ... 47
மறைஞானசம்பந்தரும் திருவருளும் ... 370
மதுரையிலும் காஞ்சியிலும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள் நினைவுநாள் சிவாச்சாரியபட்டர் அன்னம்பாலிப்பு நிதி முதற்பொருள் ரூ. 5,000 ... 451
மாறட்டான் குன்றம் உடைத்து ... 513
முருகன் ஒருபாஒருபஃது ... 58
முருகா! காரணம் என்ன? ... 115
மும்முடிச்சோழப்பிரம மாராயன் ... 416
மூன்றும் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 23, 24, 27, 28, 30, 31, 34, 85, 36, 37, 38
தமிழவேள், உயர்சைவத்திரு, பி. டி. இராசன் அவர்களை வாழ்த்திப் பாடிய தமிழ்மாலை ... 31
தனித்திரு ... 285
தலைஎழுத்து ... 543
தாயுமானவர் ... 53
தாளை வணங்காத் தலை ... 60
தேவாரத்தில் முருகன் ... 274
திருநாகேசுவரத்தில் சேக்கிழார், திருநாள் அன்னம்பாலிப்பு நிதி முதற்பொருள் ரூ. 4,300/- ... 88
திருப்பாதிரிப்புலியூரில் கோசம்வர்த்தன நிதி முதற்பொருள் ரூ. 6, 500/- ... 91
திருவைந்தெழுத்து 144, 213
திருச்செந்தூர் பிள்ளைத்தமிழில், பாரதம் போரில் பாஞ்சசந்நியம், முழங்கிய ... 204
திருப்பாதிரிப்புலியூர் ... 297
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் ஆன்மார்த்த சொக்கநாதர் நித்தியப்படி பூஜை நிதி ... 407
திருவுந்தியார் - உரை விளக்கம் 413, 461, 509, 557
திருவலஞ்சுழி சுவேத விநாயகர் பச்சைக் கற்பூரம் 2வது அபிஷேக நிதி முதற்பொருள் ரூ. 1,500/- ... 601
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 20 ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நினைவு நாள் அன்னம்பாலிப்பு திருமுறை விழா நிதி மூலதனம் ரூ. 10,000/- ... 453
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் விநாயக சதுர்த்தி ஏறுபடி நிதி ரூ. 5,000/- ... 498

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் நித்திய மகேசுவர
பூசை உதவி நிதி ரூ. 10,000/- ... 554
நாமமே சிந்தை செய் ... 384
நாதன் ஒருவனே ... 566
நீயே தஞ்சம் ... 450
நீலப்பாடி அத்திப்புலியூர் பள்ளிமாணவர்கள் மதியஉணவு
வகையரு நிதி ரூ. 5,500/- ... 599
நெஞ்சறிவுறுத்தல் 75, 112, 201
பஞ்சவன்மாதேவீச்சுரம் ... 324
பன்னிருகைகளின் பயன்! ... 536
பாடல், கி, வா, ஜகந்நாதன் அவர்கள் சென்னை ... 87
பெரும்பயணம் ... 33
பெரியாரைக்காணுதல் ... 578
பொன்றுந்துணையும் புகழ் 196, 278
பொய்ம்மையாளரைப் பாடாதீர் ... 343
வள்ளலார் வாழ்வு ... 64
வண்டும், பாட்டும் ... 340
வள்ளுவர் வாய்மொழியில் வள்ளலார்? 347, 400, 485
வடதிருமுல்லைவாயிலில் சித்திரைச்சதய நாளில்
அன்னம்பாலிப்பு நிதி ... 356
வாதவூர் அடிகளின் வேண்டாமை அன்னவிழுச்செல்வம் 261, 288
வாழும்முறை ... 351
வாதவூர் அடிகள் உழைக்காது வேண்டும் ஊதியம் 549, 584
விநாயகர் மாட்சி ... 394
விபூதிபூசிய வேடதாரிகள் ... 464
வீரமணிகன்டன் ... 17
வேடதாரி ... 594

Articles in English

Sri Kumaragurupara Swamigal Memorial
Daily Feeding Charity ... 226

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 24 | பிரமாதீச ௵ மார்கழி மீ 1௳ [16-12-73] | இதழ் 12

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே
திருச்சிற்றம்பலம்

திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்

அருளிய

திருவுந்தியார் — உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
பாலகவி
திரு, வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை

உள்ளம் உருகில் உடனாவர் அல்லது
தெள்ள அரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற. (7)

சிவபெருமான், தம் பொருட்டுத் திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து, திருவைந்தெழுத்தின் உண்மையை அருளிச் செய்யக் கேட்டும், உள்ளபடி காட்டக் கண்டும், சிவ சொரூபம் அநாதியே தம்மிடத்தில் கூடியிருக்கிற முறைமையை உணர்த்திக், கூட்டும் முறைகளிலே கூட்டக் கூடியும், தீயிடைப்பட்ட மெழுகுபோல் உருகி, வசமழிந்திருந்த பொழுது, குளிகையினலே களிம்பு நீங்கும்படி பேதிக்கப் பட்ட செம்பு, செம்பென்னும் பெயர் கெட்டுப் பொன் என்னும் பெயர் பெற்ருற்போல ஆன்ம சொரூபம் மறைந்து சிவ சொரூபமேயாய் நிற்பர். இவ்வாறு கூடுதல் ஒழிந்து தம்முடைய போதத்தினுல் ஆராய்ந்து தெரிந்து கூடுதற்கரியார். இங்ஙனம் தம்செயல் கூடாது கூடினவர்களே மேலான ஞானச் செல்வத்தை உடையவர்கள்.

பெண்கள், அவர்களுக்குரிய கணவன்மார்களிடத்துக் கொள்ளும் ஆசையைத் தலை இடை, கடை என்னும் மூவகை அன்பின் பாற்படுத்திக் கூறுவர். நாயகன் பெயரைக் கேட்ட பொழுது வசமழிதல் தலையன்பு. நாயகனை நேரில் கண்ட பொழுது வசமழிதல் இடையன்பு. நாயகனைக் கூடின பொழுது வசமழிதல் கடையன்பு. அப்பரடிகள் ஆண்டவனிடத்தில் வைத்த தலையன்பின் திறத்தை "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்று அருளிச் செய்கின்ருர். ஆன்ம நாயகனுன சிவபெருமான், பக்குவான் மாக்கள் பொருட்டுத் திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து, திருவைந்தெழுத்தை உபதேசித்து அதன் உண்மையை அருளிச் செய்வார். அதனை உச்சரிக்கும் கேண்மையை உணர்த்தி அதன் உள்ளீட்டை உள்ளபடி காட்டுவார். சிவமும் ஆன்மாவும் அநாதியே கூடியிருக்கிற முறைமையை உணர்த்துவார். ஐந்தெழுத்தின் உண்மையைக் கேட்டும், அதன் உள்ளீட்டைக்கண்டும், சிவமும் தாமும் கூடியிருக்கிற முறைமையை உணர்ந்தும்கூடி உருகி நிற்பவரே. ஆன்ம சொரூபம்மறைந்து சிவசொருபமாய்ச் சிவமாய் இருப்பர். ஆன்ம போதத்தால் சிவத்தைக் கண்டு கூடுதல் கூடாது. "கூட்டுவித்தால் ஆரொருவர் கூடாதாரே" என்பது அப்பர் பெருமான் திருவாக்கு. காட்டக் காணுதலும், கூட்டக் கூடுதலுமல்லாது,

தாமே காணுதலும். தாமே கூடுதலும் இல்லை என்பதைக் ''காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே'' எனவும், சென்றடையாத திருவுடையானை எனவும் வரும் திருவாக்குக்கள் உணர்த்திக்கொண்டிருக்கின்றன. செம்பு. இரத குளிகையினுல் களிம்பற்றுப் பொன்னுதல் போல, ஆன்மா ஞானுசிரியனது நல்லருளினுல், மலம் நீங்கிச் சிவமாக விளங்கும். அங்ஙனம் சிவமாகியவரே, மேலான சிவஞானச் செல்வராவர்

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க உந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற (8)

மூலாதாரம் முதல் ஆக்ஞை வரையுள்ள, ஆறு ஆதாரங்களிலும் வீற்றிருக்கின்ற கடவுளரைச், சகுணேபாசனையால் தியானயோகத்திலிருந்து கலந்து, அக்கடவுளர் மயமாகிப், பின்பு நிர்க்குணேபாசனையால் ஆன்ம சொருபத்தை உணர்ந்து பற்றற நின்று, அதன் பின்னர் சிவோபாசனையால் சிவம் விளங்குகின்ற மேலிடத்திற்குச் செல்வாயாக. அதுவே நின்மலமாகிய சிவத்தைக் கூடத்தக்க இடமாகும்.

சகுணேபாசனை, நிர்க்குணேபாசனை, சிவோபாசனை என்று, உபாசனைகள் மூன்று வகைப்படும். சாதகன் இம் மூன்றனுள் ஒன்றைத் தன் பரிபாகக்துக் கேற்பப் பாவித்தல் வேண்டும். சகுணேபாசனை, உருவத்திருமேனிகளில் எழுந்தருளியுள்ள கடவுளரைப் பற்றியதாய், உடம்பிலுள்ள சுழுமுன நாடி வழியில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அராகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு இடங்களிலுள்ள கடவுளரைத் தியானத்தினுல் கூடுவது குதத்துக்கு இரண்டங்குலத்துக்கு மேலும் குறிக்கு இரண்டங்குலத்துக்குக் கீழும் முக்கோணவடிவுடன் சிவந்த நாலிதழ்த் தாமரையில் விநாயகர் விளங்கும் இடம் மூலாதாரம் குறியின் மூலத்தில் அறுகோண வடிவுடன் பேரொளியை உடைய ஆறிதழ்த் தாமரையில் பிரமதேவர் விளங்கும் இடம் சுவாதிட்டானம். கொப்பூழில் மூன்று வட்ட வடிவுடன் இரத்தினப் பிரபை போன்ற பத்திதழ்த் தாமரையில் விட்டுணு மூர்த்தி விளங்கும் இடம் மணிபூரகம். இருதயத்தில் முக்கோண வடி

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

6. காவிய மாளிகையில்

திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றிலிருந்து திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் பெருமான் அவற்றில் இடம்பெற்ற நாயன்மாரைத் தவிர எவரையும் பாடக்கூடாதன்றோ? தன்னை ஆதரித்த வள்ளலான அனபாய சோழனின் முன்னோர்களில் ஒருவனான மனுநீதி சோழனைப்பாடி சோழ அரசர்கள் நீதிநெறி முறைகளை விளக்கினார், இராமாயணத்தில் கம்பன் தன் குலதெய்வமான நரசிம்மமூர்த்தியின் கதையை "இரணியன் வதைப் படலம்" என தக்க இடத்தில் அமைத்துப் பாடியதுபோல மனுச்சோழன் கதையைத் தக்க இடத்தில் அமைத்துள்ளார்.

எவரையும் புண்படுத்தாது. அவச்சொற்களே இல்லாது, நல்ல வார்த்தைகளிலேயே எதையும் கூறுவதில் வல்லமை

(முன் பக்கத் தொடர்ச்சி)

வுடன் பொன்னிற முடைய பன்னிரண்டு இதழ்த் தாமரையில் உருத்திரமூர்த்தி விளங்கும் இடம் அநாகதம் கண்டத்தில் அறுகோண வடிவுடன் வெண்ணிற முடைய பதினாறிதழ்த் தாமரையில் மகேசுவர மூர்த்தி விளங்கும் இடம் விசுத்தி புருவ நடுவில் வட்ட வடிவுடன் செந்நிறமுடைய மூன்றிதழ்த் தாமரையில் சதாசிவ மூர்த்தி விளங்கும் இடம் ஆக்ஞை. சகுணோபாசனை, சுழுமுனை வழியிலுள்ள ஆறு இடங்களை ஆதாரமாகக் கொண்டு செய்யப் பெறுவதால் ஆதாரயோகம் என்று சொல்லப்பெறும். நிர்க்குணோபாசனை, ஒரு பற்றுமின்றிச் செய்யப்பெறுவதால் நிராதாரயோகம் என்று சொல்லப்பெறும். இதில் தியான மூர்த்தி அவ்யக்தமாயிருப்பார். சிவோபாசனை, அனைத்தையும் கடந்து அறிவினுள் அறிவாய் விளங்கும் நின்மல சிவத்தைப் பற்றி நிகழும்.

(தொடரும்)

யுள்ள நல்லவர் நம் கவிநாயகர். திருவாரூரில் பரவை நாச்சி யாரின் மாளிகை உள்ளது என்று கூறவந்தவர் அவர் குலத்தை "பதியிலார்" குலம் எனக்குறிப்பிட்டு, சிவபெருமான் தவிர வேறு பதியில்லாத "தேவர் அடியாள்" என அக்குலத்திற்கும் ஏற்றமளித்தார்.

மன்னன் மக்களுக்கெல்லாம் உயிராக இருந்தான் என் றும் மன்னன் இல்லாவிட்டால் மக்களுக்குப் பெருமை யில்லை என்றும் "மன்னுயிர் கட்கெலாம்-கண்ணும் ஆவியும் ஆம் பெருங்காவலன்" என்று மக்கள் உடல் மன்னன் உயிர் என்பதால் முடியரசின் பெருமை கூறினர், பின்னல் வந்த கம்பன் "உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினன்" என்று கூறி மன்னன் உடல் மக்கள் உயிர் என்று கூறி குடியரசின் பெருமை கூறினன்.

"தனிப்பெரும் தருமம்தான் ஒரு தயா வின்றித்தானே மன் னன்" உண்மையைச் சோதிக்க வந்தது என்ருர். தருமம் தவ றினவரைத் தண்டித்துத் தானே வருந்தும் வழக்கம். ஒரு தவறும் இழைக்காத இராமனை "காடுசெல்லுகிறேன்" எனக் கூறவைத்த தருமம், அவன் காடுசெல்லப் புறப்படும்போது "இரங்கி ஏங்க" இராமனைத் தொடர்ந்து வந்தது என்பதே இதற்குச் சான்று.

"கன்று தேர்க்காலில் தானுக வந்து விழுந்தது. மேலும் வர வேண்டாத ராஜ வீதியில் வந்தது, அதனுல் அரசகுமாரன் மீது குற்றமில்லை' என மந்திரிகள் கருதியதால் அரசனிடம் கூறவில்லை, எனினும் மந்திரிகள் தன்னிடம் கூருதிருந்தது குற்றம் என எண்ணிய அரசன் "அமைச்சரை இகழ்ந்துநோக் குன்" என்று கூறி "மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத் தல்" என்ற நீதியைக் காட்டினர்.

மன்னவன் மக்களின் துயரை நீக்கக் கடமைப் பட்ட வன், அது முடியாவிட்டால் அந்தத் துயரில் தானும் பங்கு கொள்ள வேண்டும் என்பது சேக்கிழார் திருவுள்ளத்தின் நீதி அவரும் ஒரு அமைச்சராக இருந்தவர் தானே! இதே காரணம் தான் மன்னவனை "ஒரே மைந்தன் என்பதையும் உணராது"

தேர்க்காலில் மகனை வைத்து அரைக்கத் தூண்டியது என்கிறார்.

மகனைத் தேர்க்காலில் வைத்து அரைக்க முயன்றபோது மண்ணவர் கண் மழை பொழிந்தார். கண்ணிமைக்கும் நம்மவருக்குத்தான் கண்களில் நீர்வரும். இமையாத இமையோருக்குக் கண்ணீர் கிடையாது என்பது குறிப்பு. மண்ணவர் கண்மழை பொழிய, அரசனுக்கு இச்சோதனை காரணமாக இறைவன் காட்சி கிட்டப்போகிறது என்று முன் கூட்டியறிந்த தேவர்கள் மலர்மாரி பொழிந்தனராம். மேலும் இறைவனின் தோற்றத்தை மக்கள் காண இயலவில்லை. தருமம் தவறாது பக்குவமடைந்தவர் மட்டும் இறைவனைக்காண முடியும் என்பதை மனுச்சோழன் பக்குவமடைந்தவன் இறைவனைக் கண்டான் என்று கூறிக்காட்டினார்.

வீதியிலே இந்த வழக்கு நடந்ததால் வீதியிலே இறைவன் காட்சிகொடுத்தான் என்றார். வீதியிலே வரும் திருவுருவத்தை உற்சவமூர்த்தி என்றும் கோயிலிலே உள்ளதை மூலமூர்த்தி என்பர். கோயிலில் மூலவரை தரிசிக்க குளித்து திருநீறிட்டு ஆசாரியமத்துடன் செல்லவேண்டும். உற்சவ மூர்த்தியோ நாம் எந்தநிலையிலிருந்தாலும் நம்மை நோக்கி வந்து அருள்பாலிக்கின்றார், வேதம் மூல மூர்த்தி போன்றது. அதைப்பயில வடமொழிப் பயிற்சி ஆசார அநுட்டானங்கள் அதிகம் வேண்டும். தேவார திருவாசகங்கள் உற்சவமூர்த்தி போன்று, நம்தாய்மொழியிலேயே இருப்பதால், நம்மை நோக்கி எளிய தன்மையில் வந்து நம் ''மனம் புக்கு நின்று'' அருளாளர்களான நால்வர் மூலம் ஆண்டவனைக் காட்டுகின்றன. எனவே வேதங்களைக் காட்டிலும் திருமுறைகள் சிறப்புடையன எனக்கொள்ளலாம்.

இறைவன் திருக்காட்சியளித்ததைக் கூறும்கால் ''தனி விழி'' என நெற்றிக்கண்ணைச் சிறப்பித்தார். எப்போதும் மூடியிருக்கும் கண் என்றவாறு, ''ஆவுறு துயரம்'' எய்திய மன்னவனின், அவ்விதமான துயரம் அவனுக்கு நீங்கியது என்பதைக் குறிக்கும் பொருட்டு கன்று முதலில் எழுந்தது என்று

கூறிப்பின்னர் இளவரசனும் மந்திரியும் உயிர்பெற்று எழுந்தமை கூறினர்.

இப்படிப்பட்ட சிறப்புடைய திருவாரூரில் உள்ள திருக்கோயிலில் முன்னர் உள்ளது தேவாசிரியன் என்ற மண்டபம் சிவபெருமானைத் தவிரவேறு எவரையும் சிவனடியார் வணங்கமாட்டார். எனவே அடியார்களை வணங்குவதற்காக தேவர்கள் ஆசிரயித்து வரும் மண்டபம் தேவாசிரியன் எனப்பெயர் பெற்றது என்பர். அடியார்களுக்கு தேவர்களின் ஆசிரியர் என ஒருபெயர் உண்டு. எனவே அவர்கள் குழுமியிருந்த மண்டபத்திற்கு தேவாசிரியன் எனப்பெயர் வந்தது என்பர்.

பிறருக்கு வரும் துன்பத்தை நீக்குவர் சிவனடியார். நாவுக்கரசர் அப்பூதியடிகளின் மகனை எழுப்பியதும், சம்பந்தர் பாண்டியனின் வெப்புநோய் நீக்கியதும் உதாரணங்களாகும். அவைகளைத் தரிசித்தாலே நல்லது இன்று அவர்களைத் தரிசிக்க முடியாதே என்றால் அவர்களது பெயரைக் கேட்டாலே துன்பம் நீங்கும் என்பர். வெப்பு நோயால் துன்புற்ற பாண்டியன்.

''மீனவன் செவியினூடு மெய்யுணர் வளிப்போர் கூற
ஞானசம்பந்தர் என்னும் நாமமந்திரமும் செல்ல
ஆனபோதயர்வு தன்னை அகன்றிட''

என்றவாறு ஞானசம்பந்தரின் நாமம் கேட்டவுடனேயே சிறிது குணமடைந்தான் என்பர். அடியவரின் துன்பங்களைத் தீர்க்கும். வராமலும் காக்கும். நிரந்த நீற்றொளி என ஒழுங்காக விபூதியிட்ட நிலை கூறினர். நீற்றொளியால் உடல் தூய்மையுள்ளவர் என்றும், நிறை தூய்மை என்றதால் மனத் தூய்மையும், அஞ்செழுத்து ஜபம் செய்வதால் வாக்குத் தூய்மையும் பெற்ற சிவனடியார் நிறைந்திருந்த அக்கூட்டம் வெண்மையான பாற்கடல் போன்றிருந்தது என்கிறார்.

அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளியால் நிறை தூய்மையால்
புரந்த அஞ்செழுத்தோசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது.

இறைவனின் அடியார்கள் பற்றறுத்து ''அன்பே சிவமாக'' அமர்ந்திருக்கும் அருளாளர் ஆனபடியால் அவரே உலகை

ஆளத்தக்கவர், நாயன்மார்களிலும் சேரமான் பெருமாள் இடங்கழிநாயனுர், கோச்செங்கட்சோழர், நெடுமாறர், புகழ்ச்சோழர், மங்கையர்க்கரசியார் ஐயடிகள் காடவர்கோன், கழற்சிங்கர், கூற்றுவர், மெய்ப்பொருள்நாயனுர், நரசிங்க முனையர் முதலானவர் அரசகுலத்தினர், வணிகர் இனத்திலே தோன்றிய மூர்த்திநாயனுரையும் பட்டத்துயானை மாலையிட்டு அரசனுகத் தேர்ந்தெடுத்ததும் குறிப்பிடத் தக்கது. இறைவனை வணங்குவது ஒரு கடமையாகக் கொண்டனர்.

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்: புகழ்ந்துரையேன்: புத்தேளிர்
கோமான் நின்திருக்கோயில் தூகேன்: மெழுகேன்: கூத்தாடேன்:
சாமாறே விரைகின்றேன் சதூராலே சார்வானே:

என்றபடி, குழைந்து உருகிப் பூமாலையும் புனைந்து புகழ்ந்து இறைவன் திருக்கோயிலினை தூய்மை செய்து மெழுகி ஆடிப் பாடி அகமகிழ்ந்தவர்,

திரிகரண சுத்தியுடையவர் என்பதைக் காட்டுவதற்கு மூன்று விரற் கடையில் விபூதி அணிகிறோம், "பொய்யாமை கொல்லாமை" இரண்டும் சைவத்தின் கொள்கைகள். இறைவன் அடியாரது துயரைக்கேட்டுக் கருணையால் விட்ட கண்ணீரே அக்கமணி எனும் ருத்ராக்கமாயிற்று. அதுவே கருணை என்னும் கொல்லாமையின் அடையாளம். கருணைக்கு முதலிடம் கொடுப்பதுபோல் தலையில் ருத்திராக்கம் அணிந்து பின் நெற்றியில் திருநீறு அணிகிறோம். இவற்றை அணிந்த அடியார்கள் "பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்' எனக் குறிப்பிடப்பெறுகின்றது,

வானந்துளங்கில் என்? மண்கம்பமாகில்என்? மால்வரையும்
தானந்துளங்கித் தலைதடுமாறில்என்? தண்கடலும்
மீனம்படில் என்? விரிசுடர் வீழில்என்? வேலைநஞ்சுண்டு
ஊனமொன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே.

என்றவாறு ஐம்பூதங்கள் கலங்கினுலும் ஈசனைமறவாதவர், குற்றமில்லாத குணப்பெருங் குன்றனையவர். வறுமை, செல்வம் இவற்றை மீறிய சிவபெருமான் திருவடி வணங்கும் செல்வம் பெற்றவர், இறைவனைக் கும்பிடுவதே வேண்டும்

என்ற விருப்பு உடையவர். கண்ணப்ப நாயனர் இறைவனின் வலப்பக்கத்தில் நின்றிருப்பதும், காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டில் நிற்பதுமே இதற்குச் சான்று. "பெருங் குளிருக்கு உடைந்த காலே உடலே மூட ஒரு கந்தையும், உடலில் உயிர் நிற்க வேணும். இது அவன் கொடுத்த உடல். அதை நாம் அழிக்கக் கூடாது என்பதற்காக அற்ப ஆகாரமாக உப்பில் லாத கஞ்சியும் போதும்'' என்ற குமரகுருபரரின் கருத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். எந்த வேடத்திலும் வரும் பெருமையுள்ளவர், சாக்கியர் புத்த வேடத்தில் வந்து இறை வனுக்கு பூசைபுரியக் கல்லால் எறிந்தாரன்றோ? இப்படிப் பட்ட சுவனடியாரைக்கண்டு எல்லேயிலா ஆனந்தம்கொண்டு "திருத்தொண்டத்தொகை'' பாடி அருளிய சுந்தரமூர்த்தி நாய னரின் வரலாறு காண்போம்,

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் பெருமான் திருவடிகளே சரணம்

" ஞானசம்பந்தம் "

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டு ரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளே உணர் வதற்குப் பெருந்துணேயானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 5–00 வெளிநாடு ரூ. 7-00

செயலாளர், " ஞானசம்பந்தம்'' அச்சகம் ''

தருமபுரம், மாயூரம் P. O.

[சிவ சிவ

"நாதன் ஒருவனே!"

திரு S. சண்முகசுந்தரம் அவர்கள்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
ஒரக்காட்டுப்பேட்டை.

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற மனிதன் பெற்றுள்ள பெருமைகளுள் சிறப்பாக அமைந்துள்ளது வணங்குந் தன்மையேயாகும். மானிடர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் சிறந்து விளங்குகின்றனர். ஒவ்வொருவரும் தன் துறையில் தன்னினும் மேம்பட்டவர்பால் வணக்கமுடையவராகவே உள்ளனர். தன்னையே தான் விளங்கும் துறையில் தலைசிறந்தவர்களாகக் கருதுபவர்களும் தன் கொள்கையை நிலைப்படுத்த முடியாமை கண்டு ஏதாவது ஒன்றைத் தன்னினும் மேம்பட்டதாகக் கருதி வணங்குகின்றார்கள். தன்னினும் மிக்காரை வணங்குந் தன்மையுடைய மனிதன், தான் தோன்றியிருக்கும் உலகம், அஃது இயங்குந் தன்மை, இவ்வுலகில் நடைபெறும் சிறப்புகள் எல்லாவற்றிற்கும் தலைமையாக ஒருபொருள் இருத்தல் வேண்டுமெனக்கருதி அதனை வழிபடலானான். 'இனம் இனத்தைச் சாரும்' என்னும் முதுமொழிக் கேற்ப மானிடராகப் பிறந்தவர் மானிட உருவிலேயே உலகின் தலைமைப் பொருளுக்குத் திருவுருவங்கள் அமைத்து வழிபடலாயினர்.

உலகத் தோற்றத்தின் முதலில் மண், நீர் சேர்ந்து சூரிய சக்தியால் பாசி தோன்றியது. அதிலிருந்து முறையே நிற்பன, நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, நடப்பன, மனிதர், தேவர் என ஏழு பிறப்புகள் உண்டாயின என்பர். எனவே, நடப்பன என்னும் பிறவிக்கு அடுத்து மனிதன் தோன்றியிருப்பான் என ஊகிக்கப்படுகிறது. முன்னோர்கள் விலங்குகளுள் முதலில் தோன்றியதும் சிறியதுமான எலி வகையில் பெருச்சாளியை வாகனமாகவும், அதன் இனத்தில் வளர்ச்சி முறை

யில் பின்னர்த் தோன்றியதும் பெரியதுமாகவுள்ள யானையின் முகம் போன்று ஓர் உருவத்தை உண்டாக்கினர். அவ்வுருவத்தினையே மக்கள் 'விநாயகர்' அல்லது 'கணபதி' என்னும் பெயரால் வழிபடுகின்றனர்.

திருமால் என்னும் பெயரில் வழிபடப்படும் கடவுள், மீன், ஆமை, வராகம், நரசிம்மர், வாமனர், பரசுராமர், இராமர், கண்ணன், பலராமர், கல்கி ஆகிய பத்து அவதாரப் பிறவிகள் எடுத்ததாகக் கூறுவர். இதிலிருந்தும் மனிதனின் வளர்ச்சி முறையினை உய்த்துணரலாம்.

நாம் வழிபடும் கடவுள், நம் மனத்திடமாகக் கொண்டு வணங்க உருவகப் படுத்திக்கொண்ட கற்பனைகளேயாம். உருவமில்லாத அறிவைப் பெறுவதற்கு உருவமுள்ள எழுத்துக்கள் வேண்டப்படுதல் போல உருவமற்ற இறைவனை வணங்குவதற்குத் திருவுருவங்கள் சாதனமாக வேண்டியுள்ளதை நாமறியலாம். மின்சாரத்தினால் நாமடையும் பயனை அளவிடமுடியாது. அதனை நேரடியாகக் காணவுமியலாது. மின்சாரத்தின் உதவியினால் பயன் படுத்தப்படும் பொருள்களின் மூலமே அதனை உணர இயலும். அதுபோல் இவ்வுலகத்தில் தோன்றியிருக்கும் உயிர்களின் மூலமும் அவற்றின் செயல்களின் மூலமுமே தலைவனான இறைவனைக் காணவியலும்.

இறைவன், உருவும் அருவும் அல்லாதவன் என்பர் சான்றோர். உருவம் அல்லாத இறைவனை நாம் திருவுருவங்கள் வைத்து வழிபடுகிறோம். உருவமல்லாதவர் என்பது மக்களின் ஊனக் கண்களுக்குத் தெரிய மாட்டாமையினால் அவ்வாறு (அருவர்) சொல்லப்படுகின்றார்.

உலகில் நாமடையும் பயன்களிலிருந்து நம்மையும் அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளது எனவறிந்து அதனையே இறைவனெனக் கருதுகிறோம். ஆகையினால் கடவுளுக்கு 'அருளுருவம்' உண்டு எனலாம். தந்தையை விட்டுச் சிறிது தூரமே விலகியிருக்கும் மூன்று வயது குழவிப் பருவத்தினராகிய திருஞான சம்பந்தரது முன்னை நிலைத் திருத்தொண்டினைக் கருதித் திருவருள் புரியும் பொருட்டு, அவர், 'அம்மா!

அப்பா!' என்றழத் தொடங்கிய பொழுதே சிவபெருமான் உமாதேவியுடன் விடைமேல் எழுந்தருளிவந்து, உமையம்மையாரிடம், 'திருமுலைப்பாலைப் பொற் கின்ணத்தில் கறந்து இவனுக்கு ஊட்டுக' என்றருளிச் செய்ய அவரும் 'பாலமுதத்தினை' உண்பித்தார். இதனால் இறைவனுக்கு அருளுருவம் உண்டு என்னும் உண்மை மெய்ப்பிக்கப்படுகிறது.

இறைவன் 'சோதிஉருவ' மாயும் உள்ளவன் என்பதை, 'அருள் விளக்கே யருட்சுடரே யருட் சோதிச் சிவமே', 'தீப மங்கள சோதீந மோநம', 'சோதியே, சுடரே, சூழொளி விளக்கே, ஒளிவளர் விளக்கே', மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே', 'மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்' என்னும் அடியார் வாக்குகளினால் அறியலாம்.

இறைவன் 'அணுவடிவாக' உள்ளவன் என்பதை 'அணுவிற்கு அணுவாய்' என்னும் விநாயகர் அகவற்பாடல் தொடரினாலும், 'அணுவை யார்க்குந் தெரியாத தத்துவனை' என்னும் அப்பர் தேவாரத்தாலும் 'அணுவினுக் கணுவாய் மதித்திடாப் பேரொளி அனைத்தும்' என்னும் சீறுப் புராணத்தாலும் அறியலாம்.

கடவுளின் உருவத்தைக் காண்பதற்கு அவன்றன் அருள் தேவை என்பது 'அவனருளாலே அவன்றாள் வணங்கி' என்னும் மாணிக்கவாசகரின் கூற்றினால் புலனாகின்றது. அவனருள் பெறுவதென்பது அரிதான செயலாகும். நாம் செய்யும் செயல்கள் ஒவ்வொன்றும் அறத்தின்பாற் பட்டதாகவும், நாமும் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் நிரம்பி மிக்க முயற்சியுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். இதனை,

"அவனன்றி யோரணுவு மசையா தெனும் பெரிய
ஆப்தர் மொழியொன்று கண்டால்
அறிவாவ தேது அறியாமை யேதிவை
அறிந்தார்க ளறியார்களோ"

என்னும் தாயுமானவர் வாக்கினால் அறியலாம்.

அன்பர்கள் இறைவன் திருவடிவங்களைக் கண்டதும் அவன்றன் அருளுருவங்களை நினைந்து அகங்குழைந்து உருகுவதற்காகவே உருவங்கள் வைத்து வழிபடுகின்றனர். இறை

வனை நாம் எம்முறையில் வழிபட்டாலும் அவனருள் நிச்சய மாகக் கிடைக்கும். இதனை,

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனுர் தாம் வருவர்"

என்னும் அருணந்தி சிவாசாரியார் வாக்கினுலும்,

"விரிவிலா அறிவினுர்கள் வேருெரு சமயஞ் செய்தே
எரிவினுற் சொன்னுரேனும் எம்பிராற் கேற்றதாமே"

என்னும் திருநாவுக்கரசர் வாக்கினுலும் உணரலாம்.

பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்று தெய்வங்களின் கற்பனையேற்பட்ட பிறகு மக்கள் அத் தெய்வங்களை மதத்தின் வயப்படுத்தித் தமக்குள் விரோத மடைந்தனர். மேலும் சாதி வேற்றுமையினுலும், திருவுரு வங்களின் வணக்கத்தினுலும், பலியிடுவதாலும் கருத்து வேறு பாடுகள் ஏற்பட்டு சைவம், வைணவம், சமணம், பௌத்தம், இசுலாம், சீக்கியம் எனப் பல மதங்கள் உருவாயின.

ஒரேகாலத்தில் கடவுள் கொள்கையானது வகுப்பு, மதம், நிறம், மொழி, நாடு ஆகியவற்ருல் வேறுபடுகின்றது. எனவே பல்வேறு காலங்களாலும் பல்வேறு நிலைகளினுலும் பல்வேறு உருவங்களில், பல்வேறு பெயர்களில் கடவுளை வணங்குந் தன்மை வேறுபடுவது இயல்பே. ஆறுகள் அனைத்தும் ஓடிச் சென்று முடிவில் கடலில் கலப்பது போல் உலகில் தோன்றிய உயிர்களனைத்தும் கடவுள் திருவடியினையே அடைகின்றன. இதனை,

"வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளே நின்விளை யாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள் போல் வயங்கிற்றம்மா"

எனும் தாயுமானவர் பாட்டாலும்,

"விலகிவீழ் அருவித்தாரை வேறுவேருக ஓடிக்
குலநதிப் பால்வைப்பின் ஏகமாய்க் கூடும் தோற்றம்
அலகில் பல்வழியும் மூதூர் அண்மையின் ஒன்ரு மாறும்
பலபல மதமும் ஈற்றின் ஒருவழிப் படலும் போலும்"

என்னும் சிவஞான சுவாமிகள் கூற்ருலும் அறியலாம்.

ஒவ்வொரு துறையிலும் தலைவர் என்று சொல்லக் கூடியவர் ஒருவரே இருப்பார். அதுபோல் இவ்வுலகத்தை இயக்குவதற்கும் உலகில் நடக்கும் எல்லாச் சிறப்புகளுக்கும் காரண காரியமாக இருப்பவர் ஒருவரேயாவர்.

ஒரு குடும்பத்தின் தலைவனாக உள்ளவன் தந்தையாகவும், கணவனாகவும் சகோதரனாகவும் இருக்கிறான். அதுபோலவே 'ஏகமோ வன்றி யனேகமோ' என்னும் இராமலிங்க அடிகள் கூற்றுக்கேற்பவும், 'ஏகன் அநேகன்' என்னும் மாணிக்க வாசகரின் கூற்றுக்கேற்பவும் மானிடர் உலகத் தலைவனைப் பல்வேறு வடிவங்களில் அமைத்து வழிபடுகின்றனர்.

''வெளிச்சம் தரும் விளக்கினை சிலர் ஆக்க வேலைக்கும், சிலர் அழிவு வேலைக்கும் பயன்படுத்துகின்றனர். அது போலவே கடவுளின் நாமத்தையும் பலரும் பல்வேறு விதமாக உபயோகிக்கின்றனர்'' என்றார் இராமகிருஷ்ணர்.

இராமலிங்க அடிகளும் மாயையிலிருந்து விடுபடாத காலத்தில் கணபதி, முருகன், கலைமகள், திருமகள், திருமால் எனப்பல தெய்வங்களைப் பாடி வழிபட்டு வந்தார் என்பர். ஆனால் இறைவனருள் பெற்றபின் தெய்வம் பற்பல எனச் சொல்லும் தன்மையைவெறுத்து 'தெய்வம் ஒன்றே' என்றும் அதுவும், 'சிவம்' என வறிந்தார். இதனை,

''உருவ ராகியும் அருவின ராகியும் உருவரு வினராகியும்
ஒருவரே யுளார் கடவுள் கண்டறிமினோ உலகுளீர் உணர்வின்றி
இருவரா மென்றும் மூவரேயா மென்றும் இயலும் ஐவர்களென்றும்
எருவ ராயுரைத் துழல்வதென் உடற்கு உயிரிரண்டுமுன் றெனலாமே''

''ஒன்றே சிவம் என்றுணர்ந் திவ்வுலகெலாம்
நன்றே ஒருமையுற்று வாழ்''

என்னும் இராமலிங்க சுவாமிகள் பாடல்களினால் உணரலாம்.

''கடவுள் தன்னிடத்தே எவ்வகைப்பட்ட குறைபாடும் இல்லாத முழுமுதற் பொருளாயிருந்தும், குறைபாடு மிகுதியுமுள்ள மக்கள் அறியாமையின் காரணமாக தமக்குள்ள அக் குறைபாட்டினை கடவுளுக்கும் ஏற்றிச் சொல்வது வழக்கமாயிருக்கிறது'' என்று ஜோசப் அடிகள் கூற்றாக மறைமலை

யடிகள் கூறியுள்ளார். எனவே ஒவ்வொரு நாட்டிலுள்ளாரும் தத்தமக்குள்ள இயல்புக்கேற்பக் கடவுளைப் பலதிறப்பட்ட வடிவங்களில் அமைத்து வணங்குகின்றனர்.

இறைவனை அறியாமையின் பொருட்டு நாம் வழிபடு கின்ற முறைமையினைத் திருவாதவூரர்,

''திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநா மறியவோ ரந்தணனா யாண்டு கொண்டான்
ஒருநாம மோருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடித் தெள்ளேணங் கொட்டாமோ''

வடிவமான யானை முகத்தானை தோற்றுவிக்கச் செய்தாராம் சிவன். இதனை,

''பூமாது தனைமணந்த புயல் வண்ணப்
பெருமாளும் புலவர் போற்று
நாமாது தனைமணந்த நான்முகனும்
போர்மாது நயக்கு மெண்டோட்
கோமனுந் தானே யென்றுணர்த்து தற்கே
பிரணவே குஞ்சரமாய்த் தோன்றி
மாமாவின் முகத்தானை யுயிர்த்தானை
நினைந் திறைஞ்சி வழுத்து வாமே''—

என்னும் விநாயகர் புராணப் பாடலால் தெளியலாம்.

'அரியுஞ் சிவனும் ஒன்று அல்ல என்பவன் வாயிலே மண்ணு' என்பது பழமொழி.

சிவனுக்குப் பல உருவுங்கள் உண்டு. முருகனும் பல் வேறு வடிவங்களில் உள்ளான் என்பதை,

''உருவும் அருவும் உருஅருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய்''

என்னும் கந்தர்கலிவெண்பா அடிகளால் அறியலாம்.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழில்களையும் நடத்துபவன் சிவபெருமான் என்பதை,

''ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின்தொழும்பின்''

என்னும் சிவபுராண அடிகளால் அறியலாம். ஆனல், ஐந் தொழில்களும் நடத்துபவன் முருகன் என்பதை,

"ஐந்தொழிலும் ஏவித் தனிநடத்தும் எங்கோவே"
"ஐந்தொழிலும் ஓவா தளித்துயர்த்த வான்கொடியும்"

என்னும் கந்தர்கலிவெண்பா அடிகளால் உணரலாம்.

சிவனுக்குப் பிறப்பிறப்பு கிடையாது. இதனை,

"உதியா மரியா வுணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா"

என்னும் பாடலில் தெளிவாக்குகின்றார். இதற்குக் காரணம் மக்களின் மலவியல்பே யாகும். அதாவது ஒரு குடும்பத்தில் தலைவன், தலைவி இருப்பது போலவே கடவுட் கொள்கையிலும் ஆண் தெய்வம், பெண் தெய்வம் என உருவங்கள் அமைத்து வழிபடுகின்றனர்.

குயவன், பானை, சட்டி, தட்டு, சாடி எனப் பெயர் பெறும் பல பொருட்களைச் செய்தாலும் அவற்றின் மூலப் பொருளாயுள்ளது மண். தங்கத்தால் பல பெயர்களைக் கொண்ட நகைகளைச் செய்கின்றனர். இக்கருத்துக்களினின்று நாமறியும் நீதியினை மிகத் தெளிவாக எம்பிரான் சதகச்செய்யுளில் கோபால கிருட்டிணதாசர் விளக்குகின்றார்.

"பண்ணியிடும் பணிபலவே, பொன் ஒன்றேயாம்;
பாண்டத்தின் பேர்பலவே, மண் ஒன்றேயாம்;
வண்ணமிகும் பசுப்பலவே, பால் ஒன்றேயாம்;
வகைஏழின் உடல்பலவே, சீவன் ஒன்றாம்:
நண்ணும் அறுசமயங்கள் பேர் வேறல்லால்
நாதன் நீ, ஒருவனே".

"ஒருவ னென்னு மொருவன் காண்க" – மாணிக்கவாசகர்

"ஒன்றது பேரூர் வழியாற தற்குள" – திருமூலர்

"ஒன்றென் றிரு; தெய்வம் உண்டென் றிரு"-பட்டினத்தார்

ஆகிய மூவர் கூற்றுகளினின்றும் 'தெய்வம் ஒன்று' என்றுணரலாம்.

ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமைச் சித்தாந்தமும் 'தெய்வம் ஒன்று' என்பதேயாகும். அத்தெய்வம் உலகிலுள்ள எல்லா உயிர்களிடமும் காணப்படுகின்றது என்றார் காந்தியடிகள்.

நாம் வழிபடும் திருமால், பிரமன், சிவன், முருகன், விநாயகர், உருத்திரர், சதாசிவர், திருமகள், கலைமகள், மலை மகள் ஆகிய அனைவரும் ஒருவரேயாவர்.

இலக்குமியை மணந்த திருமாலும், புலவரால் துதிக்கப் பெறும் சரசுவதியை மணந்த பிரம்மாவும், சத்தி விரும்பும் உருத்திரரும் தாமே என்றுணர்த்தவே பிரணவ என்னும் கந்தர் அநுபூதி அடிகளால் அறியலாம்.

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்"

என்னும் கந்தரநுபூதி அடிகளால் முருகனுக்கும் பிறப்பிறப்பு கிடையாது என்றறியலாம்.

"ஒன்ருய் அரும்பி பலவாய் விரிந்து இவ்வுலகு எங்குமாய்
நின்ருள்"
.' ... ... சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறு சமயம் உண்டு என்று கொண்டாடிய வீணருக்கே'!

என்னும் அபிராமி அந்தாதி அடிகளால் பெண் தெய்வம் ஒன்றே எனப் பெறப்படுகின்றது.

விநாயகர் நான்மணி மாலையில் பாரதியார், "நாதன் ஒரு வன்" தான் என்பதைப் பலவிடங்களில் குறிப்பிடுகின்ருர். இதனை,

':விநாயக தேவனுய், வேலுடைக் குமரனுய்,
நாராயணனுய், நதிச்சடை முடியனுய்,
பிறநாட்டிலிருப்போர் பெயர்பல கூறி
அல்லா! யெஹோவா! எனத்தொழு தன்புறும்
தேவருந் தானுய் திருமகள், பாரதி
உமையெனுந் தேவியர் உகந்தவான் பொருளாய்
உலகெலாங் காக்கும் ஒருவனை"

என்னும் பாடலால் உணரலாம்.

பன்மையில் ஒருமை காண்பது அறிவுடைமை. ஒருமையில் பன்மை காண்பது அறிவிலாமையாகும். எனவே நாம் அறியாமையினுல் பல திருவுருவங்கள் வைத்து வழிபட்டாலும். "நாதன் ஒருவனே" என்னும் கொள்கையுடையவரா யிருந்து அவனருள் பெறுவோமாக.

'எளிவந்தபிரான்'

திரு; ஆ. சண்முகநயினர் அவர்கள்:
PROJECT OFFICER (A.R.C.)
திருச்சிராப்பள்ளி–1

-o-

''பொன்னு மெய்ப் பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறியொண்ணு
எம்மானை எளிவந்தபிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்து அணி
ஆரூரானை மறக்க லுமாமே'' —சுந்தரர்.

மேலே கண்ட தேவாரத்தில் சுந்தரர் கையாளும் ''எளிவந்த பிரான்'' என்ற சொற்ருெடர் நினைந்து நினைந்து போற்றத் தக்க ஒன்று. 'எளிவந்த தன்மை' என்பதைச் 'சௌலப்யம்' என்ற வடசொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லாகக் கொள்ளலாம். அந்த 'எளிவந்த தன்மையை'ச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

புகழுடம் பெய்திய சேங்காலிபுரம் அனந்த ராமயதீந்திரர் இராமன் மானிடச் சட்டை தாங்கி இம்மண்ணுலகில் தோன்றியதற்குக் காரணம் என்ன? ''என்ற வி ஞ வை எழுப்பி அவரே விடையும் பகர்வார்.'' அரக்கர்களை ஒழிப்பதற்காகவே இராமன் திருவவதாரம் செய்தார் என் று கூறுவது இயல்பு. ஆனல் அது சரியன்று அவ்வாறு கூறுவது இராமனுக்கே இழுக்கு, அரக்கர்களை ஒழிக்க இறைவன் திரு அவதாரம் செய்தாக வேண்டும் என்றில்லை. எண்ணிய அளவிலேயே (சங்கற்ப மாத்திரத்திலேயே) அரக்கர்களை இறைவன் அழித்திருக்க கூடும். இராமவதாரத்தின் நோக்கம் அது வன்று. நல்லொழுக்கம் (சௌசீலயம) எளிவந்த தன்மை

(சௌலப்யம்) ஆகியவற்றுக்கு இலக்கணமான ஒருவாழ்வு வாழ்ந்துகாட்ட வேண்டும் என்பதற்காகவே இராமன் திரு அவதாரம் செய்தான்'' என்பார். அவ்வாறு சிறப்பிக்கப் பெற்ற எளிவந்த தன்மை சிவபெருமானிடம் சிறப்புற விளங்குவதைக் காண்போம்.

சிவபெருமானுடைய எளிவந்த தன்மையை முற்றத் துய்த்தோர்களில் தலையாயவர் தம்பிரான் தோழர் ஆகிய சுந்தரமூர்த்திநாயனர். பெரும்பாலான அடியவர்கள் இறைவனை ஆண்டானுகத், தலைவனுகக் கண்டு எட்ட இருந்தே வழிபட, சுந்தரர் சிவபெருமானைத் தோழராகவே கண்டு உரிமை பாராட்டியவர். சிவபெருமானுடைய எளிவந்த தன்மைதான் சுந்தரருக்காக என்னவெல்லாம் செய்தது? திருமணக் கோலத்திலிருந்த சுந்தரரிடம் முதியவராகச் சென்று அற்புதப் பழஆவணம் காட்டித் தடுத்தாட் கொண்டதைப் போற்றுவதா? 'பித்தா' என வன்மை பேசியதைப் புகழுரையாகவே கொண்டு அதையே முதலாக வைத்துச் சொற்றமிழ் பாடுமாறு பணித்ததைப் போற்றுவதா? சித்தவட மடத்தில் துயிலும் சுந்தரரிடம் சென்று வலியத் திருவடி சூட்டியதை நினைவதா? திருவாரூரில் ''நீ எனக்குத் தோழன்; என்றும் மணக்கோலத்துடன் இருப்பாயாக'' என்று அருளி அவரைத் 'தம்பிரான் தோழராக' ஆக்கியதை வியப்பதா? ''குண்டையூர்சிலநெல்லுப்பெற்றேன்; ஆளிலை எம்பெருமான் அட்டித்தரப்பணியே'' என்று சுந்தரர் வேண்டிய அளவில் நெல்முழுவதையும் குண்டையூரினின்றும் திருவாரூர் கொண்டு சேர்த்ததை வியப்பதா? பங்குனி உத்திரத் திருநாளுக்குப் பொன் உதவுவதற்காக, தலையணைச் செங்கற்களையே பொன்னுக்கியது, திருமுதுகுன்றில் திருமணிமுத்தாற்றில் இட்ட பன்னீராயிரம் பொன்னைத் திருவாரூர் கமலாலயத்தில் கிடைக்கச் செய்தது, திருக்கச்சூரில் தம் அடியவர்க்காய் உணவு இரந்து வந்து தந்தது. இவற்றில் எதுதான் மறக்கற் பாலது? பரவையார் சுந்தரரிடம் கொண்ட ஊடலை நீக்குவதற்காகத் திருவாரூர்த் தெருக்களில் ஒருமுறைக்கு இருமுறை தம் திருவடி சிவப்ப நடந்து தூதுசென்ற ஒரு நிகழ்ச்சிக்கு ஈடாக சமயஇலக்கியங்களில் வேறு ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட இயலுமா?

சுந்தரர் வாழ்வில் சிவபெருமானின் எளிவந்த தன்மைக் குச்சான்றான சில நிகழ்ச்சிகளை மேலே கண்டோம். இனி சுந்தரர் வாக்கிலிருந்தே இரண்டொன்று காண்போம். திருவாரூர்ப் பெருமானிடம் இரண்டாவது கண் தருமாறு விண்ணப்பிக்கும் "மீளா அடிமை" எனத் தொடங்கும் பதிகத்தின் பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஈற்றடியில் "வாழ்ந்து போதீரே" என்று வசைபாடியே முடிக்கிறார், சிவபெருமான் எத்துணை எளிவந்தவராக இருந்தால், சுந்தரர் இத்துணை உரிமை பாராட்டி இருப்பார்? திருநொடித்தான்மலைப்பதிகத்தின் பாடல் ஒவ்வொன்றும் இவ்வெளிவந்த தன்மையை வியப்பதாக அமைந்ததே. தன்னைவந்து எதிர்கொள்ள மத்த யானை அருள்புரிந்ததையும்; மந்திரமாமுனிவர் "இவன் ஆர்?" என, எம்பெருமான் "நம்தமர்; ஊரன்" என்றதையும் நினைந்து நினைந்து சுந்தரர் கண்ணீர் உகுக்கும் இப்பாடல்களை "உளம் கலந்து பாடும்" எவருக்கும் சிவபெருமானின் எளிவந்த தன்மை வியப்பூட்டியே தீரும். உலகியலில், வாழ்க்கையில் சற்றே உயர்ந்து விட்டவர்கள் தங்கள் உறவினர்களை—பெற்றோரையும் உடன் பிறந்தோரையும்கூட—தம்தமர் என்று கூறக் கூசுவதைக் காண்கிறோம். ஆனால் சிவபிரானோ சுந்தரரை "நம்தமர்" என்று உரிமையுடன் கூறுகிறார். இந்த எளிவந்த தன்மையைப் பலகாலும் நினைந்து நினைந்து உருகிய சுந்தரர் அதை மேலும் விளக்க வேறுசொற்கள் கிடைக்காமல் "எளிவந்தபிரான்" என்றே குறிப்பிடும் அருமையான தேவாரம்தான் முதற்கண் நாம்கண்ட திருவாரூர்த்தேவாரம்.

இனி இதே எளிவந்த தன்மை மணிவாசகரின் திருவாசகத்தில் காணப்படும் சில இடங்களைக் காண்போம். மணிவாசகரின் அருமையான அனுபவத்தை விளக்கும் பாடல் இது:—

"நானேயோதவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தென்னுள்ளம் புகுந்த டியேற்கருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"

(திருவே சறவு—10)

கற்பகோடி காலம் உடலைவருத்தி ஊசி முனை மேல் நின்று தவம் இயற்றினாலும் காணமுடியாதவனாக இறைவ

னைக் காட்டி நம்மை அச்சுறுத்தும் சமயங்கள் பல. ஆனால் மணிவாசகரோ "நான் தவம் எதுவும் செய்யவில்லை ஒரே ஒருமுறை "சிவாய நம" என்றேன். சிவபெருமான் தானாகவே என் உள்ளத்திற் புகுந்து என்னை ஆட்கொண்டான்" என்கிறார் எளிவந்த தன்மைக்கு இதனினும் சீரிய இலக்கணம் காண இயலுமா? மேலும் மணிவாசகர் கீழ்க்கண்ட பாடல்களில் சிவபெருமானை எளியன் எளிய பேராளன் என்றே குறிப்பிடுகிறார்:–

"அளவறுப்பதற்கரியவன் இமையவர்க்கு
அடியவர்க்கு எளியான் ... ..."   (திருச்சதகம் 35)

"பாரரர் விசும்புள்ளார் பாதாளத்தார்புறத்தார்
ஆராலும் காண்டற்கரியான் எமக்கு எளிய பேராளன்...... ..."
(திருவம்மானை 2)

சுந்தரரும் மணிவாசகரும் சிவபெருமானை எளிவந்த பிரானாகக்கண்ட பெற்றியை மேலே கண்டோம்; உலகியலில் சில "சிறிய பெரியோர்களைக்" கண்டு பேசவே மக்கள் எவ்வளவு அல்லலுறுகின்றனர் என்பதை அறிவோம். அதை உள்ளத்தில் கொண்டு சிந்தித்தோமானால் தான் சிவபெருமானுடைய 'எளிவந்த தன்மை'யின் உயர்வுதெரியும். சுந்தரருக்கும் மணிவாசகருக்கும் எளிவந்த பிரானாக இருந்தவன் நமக்கும் எளிவந்த பிரானாகவே அருள்வான் என்பது உறுதி. எனவே அவனை அரியவனாகக் கருதி அகலாமல், எளிவந்தவனாகக்கருதி வழிபடுவோமாக! அந்த எளிவந்த பிரானைப்போற்றும் நமக்கும் ஒரு கடமை உண்டு அவன் வழிதானே நமக்கும் வழி எனவே சைவப் பெருமக்களும் சிவபெருமானைப் போலவே எளிவந்தவர்களாக நடக்கவேண்டுவது இன்றியமையாதது. அப்பர் சுட்டிக்காட்டிய "ஆவுரித்துத்தின்றுழலும் புலையர்" களையும் சிவனடியார் என்னில் "நம்தமர்" என்று உரிமையோடு அரவணைத்துச் செல்லவேண்டும். எளிவந்த பிரானுக்குகந்த சிறந்த வழிபாடு அதுவே!

———

பெரியாரைக் காணுதல்

திரு. அருணகிரிதாசன் P. S இராமமூர்த்தி அவர்கள்,
டால்மியாபுரம்.
[திருச்சி மாவட்டம்]

கல்லாரே ஆயினும் கற்றுரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர் தொல் சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப் பூச் சேர்தலால் புத்தோடு
தண்ணீர்க்குத் தான் பயந் தாங்கு —நாலடியார்

இக் கட்டுரையின் தலைப்பைப் படித்தவுடன் வாசகர்களின் நினைவுக்கு வருபவர் வேறொரு 'பெரியார்' ஆவார் என்பதில் ஐயமில்லை!

''ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற 'உத்தமர்' தம் உறவு வேண்டும்'' என்பார் இராமலிங்க வள்ளலார். இறைபணிகளிலேயே தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் ஒரு உத்தமப் பெரியாரைப் பற்றித்தான் நாம் இங்கே குறிப்பிடுகிறோம்.

சென்ற அக்டோபர் மாதம் 10-ந்தேதி வயலூர்த் திருப்பதியின்கண் திருமுருகன் திருச்சந்நிதி முன் அப்பெரியாரைச் சந்தித்து ஆசிகள் பெற்ற அடியேன், அன்று மாலையே அப்பெரியார் இல்லத்திற்குச் சென்று மீண்டும் அவரைச் சந்தித்து அறிவை வளர்த்துக்கொள்ள அவாக் கொண்டேன்.

அப்பெரியார் இல்லத்தில் நுழைந்தவுடனேயே நம் உள்ளத்தில் வந்து பதியும் 'நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!' என்ற மங்களத் திருவாசகம் 'சிவ சிவ' என்பன! திருச்சி மாநகருக்கு பவளக் கிரீடம் அணிவித்தாற்போல் தோன்றும் மலைக்கோட்டை கீழ் வீதியில் அப்பெரியாரின் இல்லம் உள்ளது. இல்லத்தின் முதலறைக்குச் சென்றவுடன்

கண்களை யெட்டும் பொருள்கள் சாதாரண மரமேஜையும் மரஸ்டூலும்தான்! மிகவும் எளிய வாழ்க்கையையே நாடுபவர் என்ற உண்மை நன்கு விளங்கிற்று.

மேஜையின் மேல் அடுக்கி வைத்திருந்த புத்தகங்கள் பலதரப்பட்டவையாக இருந்தன. புராணப் புத்தகங்கள், வரலாற்றுப் புத்தகங்கள் மதசம்பந்தமான மாதாந்தர, வாராந்தர வெளியீடுகள் போன்ற பல வகைகள். அப்பெரியாரை வாழ்த்தி நல்லோர்கள் அளித்த வாழ்த்துப் பத்திரங்கள் அவற்றிலே ஆங்காங்கே காணப்பட்டன.

'ஐயா!' என்ற அடியேன் குரல் கேட்டவுடன் 'வாருங்க! வாருங்க!' என அன்புடன் அழைத்து, 'சிவ சிவ' என நா உச்சரிக்க, இருக்கச் செய்தார். கைகூப்பி வணங்கி அமர்ந்தேன்.

திருவெண்ணீறு அணிந்திருந்த நெற்றியின் மத்தியில் சிறு அளவில் சந்தனப்பொட்டு. வைரத்தில் சிவப்புக்கல் பதித்தாற்போல் குங்குமம் விளங்கியது. கழுத்திலே தங்கப் பூண்போட்ட உருத்திராக்கம். சந்தனம் மணக்க, உடலெல்லாம் திருநீறு! மத விஷயங்களில் பரந்த ஞானம் படைத்த அப்பெரியார் குழந்தையைப் போன்று இனிக்கப் பேசும் தன்மையையும் பெற்றிருந்தார். அப்பெரியார் இவர் தான் ... ... சைவப்புலவர், தமிழ் வித்துவான், திருமுறைக்கலைஞர், தமிழகப் புலவர் குழுவில் ஒருவர், மௌனகுரு வழிபாட்டுக்கழகச்செயலாளர், உயர்திரு தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள்.

1961-ஆம் ஆண்டில் மணிவிழாக் கொண்டாடிய அப்பெரியார் இப்பொழுது 73-வது வயதையெட்டியிருக்கிறார். மத விஷயங்களில் ஓதுவார் அவர்கள் பெற்றிருக்கும் பெரும் அறிவைப் போற்றும் வகையில் மதுரை-திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் 1955-ஆம் வருடத்தில் 'திருமுறைக் கலைஞர்' எனும் சிறப்புப் பட்டத்தைக் கொடுத்து கௌரவித்துள்ளார்கள் என்ற உண்மை ஒரு வாழ்த்துப் பத்திரத்திலிருந்து தெரியவருகிறது,

உயர்தர வகுப்புகளுக்குக் கல்வித் தொண்டு புரிந்த அப்பெரியார், இறைத் தொண்டுகளிலும் இடையறாது ஈடுபட்டு அருள் நிறைந்தவராகக் காணப்பட்டார். ஆழமான அறிவும்

அனுபவமுமுள்ள அப்பெரியாரை வணங்கிச் சில வினாக்களை எழுப்பி, அவர் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள முற்பட்டேன். சலிப்புத் தட்டாமல் வினாக்களுக்குத் தமது கருத்துக்களைத் தெரிவித்த ஓதுவார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு வினாக்களையும் கருத்துக்களையும் வாசகர்கள் முன் வைக்கிறேன்:—

1. வினா: தாங்கள் ஏதோ எழுதி அரைகுறையாகநிறுத்தி வைத்திருக்கிறீர்களே! அது.........?

பதில்: 'ஞானசம்பந்தம்' எனும் பத்திரிகைக்கு அனுப்புவதற்காக, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் திருவரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறேன்

2. வினா: புராணங்களுக்குத் தாங்கள் விரிவுரை எழுதியிருக்கிறீர்களா?

பதில்: கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், நீதிநெறி விளக்கம், கந்தரனுபூதி, கந்தர்கலிவெண்பா, திருவாரூர்நான்மணிமாலை, ஒன்பதாம் திருமுறை – திருவிசைப்பல்லாண்டு ஆகிய இவற்றில் சிலவற்றிற்கு விரிவுரை. பொழிப்புரை, தெளிவுரை, வசனங்கள் எழுதியுள்ளேன். (இவ்வாறு கூறிக்கொண்டே அடியேனுக்கு கந்தர் கலிவெண்பா பொழிப்புரைப்புத்தகம் ஒன்றைக் கொடுத்தார். நன்றி கூறிப்பெற்றுக்கொண்டேன்).

3. வினா: ஆண்டவனிடம் மக்களுக்குப் பக்தி அதிகம் ஏற்பட்டிருக்கிறதா?

பதில்: இறை வழிபாட்டிலே மக்கள் இன்று அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். ஆழ்ந்த பக்தி சற்று குறைவாகக் காணப்படுகிறது. இறைவனை யணுகுவதில் 'மேலெழுந்தவாரி' நிலையைத் தவிர்ப்பது நன்மையை அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை,

4. வினா: மாணவர்களிடையே — இளைஞர்களிடையே பக்தி வளர்ந்திருக்கிறதா?

பதில்; அரசியல் புயலிலே சிலசமயம் இளைஞர்கள் சிக்கிவிடுகிறார்கள். இதற்கு அறியாமைதான் காரணம் என நினைக்கிறேன். அரசியலில் ஈடு பாடுகொள்ளாமல் பள்ளிக்குச் சென்று ஆசிரி யரின் போதனைகளைக் கேட்டு, ஆண்டவனை யும் வணங்கி வந்தால் இளைஞர்களின் வருங் காலம் மேம்பட்டதாக அமையும்.

5. வினா: ஆலயங்களில் அடிக்கடி விக்கிரகங்கள் திருட் டுப் போகின்றனவே; இதைத் தடுக்கத் தாங் கள் கூறும் யோசனைகள் யாவை?

பதில்: கோவில் நிர்வாகிகளும் பணியாளர்களும் மிகுந்த கண்காணிப்புடன் செயல்படவேண் டும். சில ஆலயங்களில் விக்கிரகங்களின் கீழ்ப் பாகங்களிலுள்ள துவாரங்களில் கெட்டிக் கம் பிகளை நுழைத்து பீடத்தோடு இணைத்துவிடு கிறார்கள். இந்த முறையைப் பின்பற்றலாம். நம் ஆலய விக்கிரகங்களெல்லாம் மிகவும் விலை உயர்ந்தவை; கம்பிக் கேட்டுகளுக்குள் வைத் துப் பாதுகாப்பதும் நல்லது

6. வினா: ஆலயங்களில் தமிழில் அருச்சனை செய்ய வேண்டுமென்கிறார்களே; தங்கள் கருத்து என்ன?

பதில்: அடியார்களின் சரித்திரங்களைப் பாருங்கள்; ஒரு வருக்கு 'பித்தா பிறைசூடி' என்று இறைவன் அடியெடுத்துக் கொடுத்தான். மற்றொரு அடி யாருக்கு 'பூமேவு' என்று ஆண்டவன் முத லடியை எடுத்துக் கொடுத்தான். அருணகிரி நாதருக்கு 'முத்தைத்தரு' என முதலடி எடுத் துக் கொடுத்து அருள்புரிந்தான் குமரன். "பாட்டே அருச்சனை ஆகும்" என்றார் சுந்

தரர். இவைகள் எல்லாம் தமிழ் மொழிகள் தானே! 'போற்றி'யென்றாலும் 'நம;' என்றாலும் பொருள் ஒன்றுதான். அதாவது 'வணங்குகிறேன்!. ஓசையே உருவான இறைவனுக்கு எந்தப் பாஷைகளிலும் அருச்சனை செய்யலாம். (இவ்வாறு விளம்பிக்கொண்டே 'தமிழ் அருச்சனை மலர் (விநாயகக் கடவுள்)' என்னும் புத்தகத்தை அடியேனுக்கு அளித்தார்)

7. வினா: இறைவனின் திருநாமங்களைச் சிலர் முறைதவறிப் பயன் படுத்துகிறார்களே; தாங்கள் கருதுவது என்ன?

பதில்: இறைவனுக்குப்பெயர் ஏது! இப்பெயர்களெல்லால் நாம் இறைவனுக்குக்கொடுத்ததுதானே! ஒவ்வொரு திருநாமமும் ஆண்டவனின் திருவிளையாட்டைத்தான் நினைவுக்குக் கொண்டு வருகிறது! அப்பூதியடிகள் தன் வீட்டு மாட்டிற்குத் 'திருநாவுக்கரசர்' என்று பெயர் வைத்தார் (தேவாரத்திலிருந்து ஒரு பாட்டையும் எடுத்துக்காட்டினார்). மேம்பட்ட பொருள்களுக்கு இறைவனின் திருநாமங்களை வைப்பதில் குற்றம் காண முடியாது அவ்வாறு பெயர் சூட்டுவதினால் இறைவனின் திருநாமங்களை அடிக்கடி கூறும்படியான வாய்ப்புகள் ஏற்படுகின்றன. உதாரணமாக 'முருகன் தண்ணீர்ப்பந்தல்' எனப் பெயர் வைத்தால் குற்றமாகக் கருதமுடியாது. இழிபொருள்களுக்கு இறைவனின் திருநாமங்களைப் பயன்படுத்துவது அவ்வளவு போற்றுதற்குரிய செயலாகக் கருதமுடியாது.

8. வினா: வார வழிபாடு பற்றி தங்கள் கருத்து யாது?

பதில்: வார வழிபாடு என்பது தவறு! 'வாரக்கூட்டு வழிபாடு', 'மாதக் கூட்டு வழிபாடு' என்றே கூற வேண்டும். கூட்டு வழிபாட்டினால் நல்

லார்களைச் சந்திக்கும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. மக்களிடையே பக்தி பெருக ஒருநல்ல மார்க்கமாக அமைகிறது. ஒற்றுமை வளருகிறது. நம்பிக்கை வளருகிறது. உயர்வுதாழ்வு இன்றிச் சமத்துவம் உண்டாகிறது.

நாள்தோறும் அதிகாலையில் சிவபூசையில் ஈடுபடும் ஓதுவார் அவர்கள், தாயுமானவர், மாணிக்கவிநாயகர் தரிசனத்தைத் தவறவிடுவதில்லை. வினாக்களுக்குப் பதில்களளித்த அப்பெரியாருக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்து வணங்கி விடைபெற்றேன். 'சிவ சிவ' என திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே, திருவெண்ணீற்றை அடியேன் நெற்றியில் அணிவித்து உள்ளன்புடன் ஆசிகள் கூறி விடை கொடுத்தார்.

நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க்கு உண்டோ–பெறத்தகாதனவே!

— சிதம்பர மும்மணிக் கோவை.

வாதவூர் அடிகள் உழைக்காது வேண்டும் ஊதியம்

சைவப்புலவர்
வித்துவான், திரு. மு. பரசுராமன் அவர்கள்,
செஞ்சி (தெ. ஆ. மாவட்டம்)

மனிதனுக்குக் கிடைத்தற்கரிய பொருள் காலம். அதனை அப்படியே வாழ்விற்குப் பயன்படுத்த வேண்டும். கடந்த காலம் கடந்த காலமே தான். இதனால்தான் வள்ளுவர்,

"நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள(து) உணர்வார்ப் பெறின்". (குறள்-334)

என்றும், நம் முன்னோர்கள் 'காலம் பொன் போன்றது' என்றும், ஆங்கில நாட்டார் 'Time is Gold' என்றும், 'Life is on the edge of sword that seems to be a measure of time called day, if there are people who can realize it' என்றும் கூறியிருப்பதைக் காணலாம். எனவே மனிதன், ஒவ்வொரு கணத்தையும் உழைப்பாக்கி, உழைப்பைக் காசாக்கிக் காசின் பயனை நுகர வேண்டும்.

சமயவாழ்வும் உழைக்காது ஏமாற்றிப்பிழைக்கும் வித்தை;

இடைப்பட்ட காலத்தில், உழைக்காமல் ஊதியம் மிகுதியாகப் பெற ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைத்த உலகத் தன்மை சமயவாழ்விலும் எப்படியோ குடிபுகத் தொடங்கி விட்டது. உண்மைக்கும், அன்பிற்கும் உறைவிடமான சமயத்துறையிலும், சமய உழைப்பின்றிச் சமயப் பயனாகிய இன்பப்பேறு எதிர்பார்க்கப்பெற்றது. இந்நிலையைப் போக்க, வையத்தை வாழ்விக்க விளங்கிய வாதவூர் வள்ளல், உலகத்தாரை மனத்திற்கொண்டு, தன்மேல் அச்செயலை ஏறிட்டு உழைக்கத் தவறியிருக்கும் செயல்களாகக் கூறுவதைப் பின்வரும் செய்யுளால் அறியலாம்.

"[1]தவமே புரிந்திலன்; [2]தண்மலர்
இட்டு முட்டாது இறைஞ்சேன்;
[3]அவமே பிறந்த அருவினை
யேன்; [4]உனக்(கு) அன்பருள் ஆம்

சிவமேபெறும் திரு எய்திற்றி
லேன்- [1]நின் திருவடிக்(கு) ஆம்
பவமே அருளு கண்டாய்! அடி
யேற்(கு) எம் பரம்பரனே!''

(திருவாசகம்-திருச்சதகம்-பாடல்.5)

முதலாவது தவறு:

'தவமே புரிந்திலன்' என்பதாகும். வள்ளுவர் கூறிய தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம் வானம் வழங்கா தெனின்' என்னும் குறளுக்குப் பொருள் வரையும் பரிமே லழகர் தவமாவது; மனம், பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின என் பர். எனவே உணவுதான் எல்லாத் தீமைகளுக்கும் அடிப் படைக் காரணம். உணவுக்கும் உணர்வுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதனாலன்றோ நம் ஆன்றோர்கள் 'பசிவந் தால் பத்தும் பறந்து போம்' 'உணவு சுருங்கின் ஊன் சுருங் கும்' என்றனர் போலும்! அன்றியும் நம் முன்னோர்கள் விரத நாட்களில் முருங்கை, கத்தரி முதலிய காய்கறிகளை உண்ணா திருந்தனர். எல்லாவற்றினும் 'வெண்காயம்' (வெங்காயம்) அதிக உணர்ச்சி தூண்டக் கூடியது, பொதுவாக இக்காலத் தில் வெண்காயம் பயன்படுத்துதலை வெகுவாகக் குறைத்துக் கொண்டாலே 'குடும்பக்கட்டுப்பாடு' தேவையில்லை எனலாம் உணர்வு ஒன்ற வேண்டுமானால் முதற்கண் வேண்டப்படுவது உணவுநெறி. உணவு, அமைதி அளிக்கும் சாத்துவித உண வாகவும், குறைவாகவும் இருத்தல் வேண்டும். அதுவும் மிகுதி யாக உண்ணின் உடம்பு வளரும்; நோய் பெருகும்; காமம் வளரும். ஆனால் உணர்வு வளராது. இதனாலன்றோ வள் ளுவப் பெருமகனாரும்,

''செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.'' (குறள்-412)

என்றனர். அதுவும் 'சிறிது ஈயப்படும்' என்று கூறியிருத் தலைப் பரிமேலழகர் உரைமூலம் சுவைத்தல் மிகுதி இன்பம் பயப்பனவாம். எனவே, மணிவாசகரும் இவ்வாறு சிறிது வயிற்றிற்கு ஈந்து ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிய

தைக் காணலாம். எனவே ஊன் சுருங்கச் சுருங்க உள்ளொளி பெரிதும் பெருகும் என்பதை அறியலாம்.

தவத்தின் வடிவாவன: 'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை; அற்றே தவத்திற்(கு) உரு? என்னும் குறளால் தவத்தின் வடிவாவது உண்டி சுருக்கல் முதலியவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், தாம் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாமையுமாகிய அவ்வளவிற்று என்பதையும்,

'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்'.

என்னும் குறளால் யாவராலும் செய்யப்படுவதாய தவத்தைத் தாம் செய்யும் தானத்தின்மேல் விருப்பமிகுதியான் இல்லறத்தையே பற்றி நிற்பவர்கள் மறந்தார்போலும் என்னும் கருத்தால் தானத்தினும் தவம் மிக்கது என்பதையும் நாமறியலாம்.

எனவே, இங்ஙனம் புலனொடுக்கித் தடுத்து வளி இரண்டும் கவிப்பற்று மூச்சதுர முதலாதாரங்கள் அகமார்க்கம் அறிந்தவற்றின் அரும்பொருள் உணர்ந்தங்கு அணைந்துபோய் மேலேறி அலர்மதி மண்டலத்தின் முகமார்க்க அமுதுடலம் முட்டத்தேக்கி முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள் உக அட்டாங்க யோகம் முற்றும் உழத்தல் செய்ய தான் தவத்தை விரும்பிச் செய்யவில்லை: ஆனால் உன் அருளு மட்டும் வேண்டுமென முதல் தவறாகத் 'தவமே புரிந்திலன்' என மணிவாசகர் கூறுவதை அறியலாம். இதனையே பின்னும்,

'ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்'
(*திருச்சதகம்-14*)

எனக் கூறுமாற்றாலும் அறியலாம்.

இரண்டாவது தவறு:

'தண்மலர் இட்டு முட்டாது இறைஞ்சேன்' என்கின்றார். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி இறைவனை உள்ளவாறு உணர்ந்தவர்களே சிவஞானம் கைவரப் பெற்றவராவர் இங்ஙனம் பேரின்ப மயமான சிவஞானம் கைவரப்பெற முதலில் உடலுழைப்பே வேண்டும். இறைவனை அடையும் வழிகளாக,

''சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க் கம்என்னும் சங்கரனை அடையும்
நன்மார்க்கம் நாலவைதாம் ஞான யோகம்
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்'

[சூ-8-செ-18]

எனச் சிவஞான சித்தியார் இயம்பும், எனவே இந்நான்கில் மணிவாசகப் பெருமான் சரியை (தாதமார்க்கம்), கிரியை (சற்புத்திர மார்க்கம்) ஆகிய தொழில்களைச் செய்திலேன் என்கிறார்.

சரியையும் அதன் பயனும்:

''தாதமார்க் கம்சாற்றின் சங்கரன்தன் கோயில்
தலமலகிட் டிலகுதிரு மெழுக்கும் சாத்திப்
போதுகளும் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடி
தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்
செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வ(து)
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியை செய்வோர் ஈசனுல கிருப்பர்.'

[சூ-8-செ-19]

என்னும் சிவஞான சித்தியார், எனவே, சிவன் கோயிலில் மெழுகி அலகிட்டு, திருமெழுக்கினையும் சாத்தி, வைகறை உணர்ந்து போந்து புனல்மூழ்கி வாயுங்கட்டி மெய்ம்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னிக் கையினில் தெரிந்த நல்ல கமழ்முகை அலர்ந்ததைக் கொய்து பூந்தார்மாலை கண் ணிகள் பல புனிதற்குச் சமைத்து (திருப்பள்ளித்தாமம் செய்து) சாத்தி இறைவனைப் புகழ்ந்துபாடி திருவிளக்கிட்டு நந்தவனமும் செய்து, சிவனடியார்களைக் கண்டால் அடி யேன் செய்வது யாது பணி எனப் பணிந்து, தம் பணியைச் சரீரத்தால் செய்யும் சரியைத் தொழிலைச் செய்யாது தவறு செய்து விட்டேன் என்கிறார் மணிவாசகர்.

கிரியையும் அதன் பயனும்:

''புத்திரமார்க் கம்புகலில் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனம்அமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்தி மானும்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த

பத்தியினுல் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினெடும் எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும்இக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங் காலே'.

[சூ-8-செ-20]

என்னும் சிவஞான சித்தியார். எனவே, வெள்ளைப்பிறையணி யும் வேணிப்பிரானுக்குப் புதிய மணமுள்ள நல்போதுகளும், புகை ஒளி மஞ்சனமும், பஞ்சகௌவியமும் முதலியவற்ருல் தூயசுத்தி செய்யும் திருமஞ்சனம் செய்து மூர்த்தி மானும் சோதியை இறை (சிவன் எனவே பாவித்துப் பத்தியினுலும் அன்பினுலும் அருச்சித்துப் புகழ்ந்து போற்றிப் பரிவினெடும் எரியினுல் வரும் செயல்களும் பண்ணி அன்ருடம் செய்யும் இக்கிரியைத் தொழிலைச் செய்வோர்கள், மலம் தன்னைச் சாரா நின்மலன்தன் அருகே சிவஞான ஒளியாய் அருகிருப்பர். எனவே இத்தகைய கிரியை தொழிலைச் செய்யாது யான் தவறு செய்து விட்டேன் என்கிருர் வாதவூர் வள்ளல். இங் ஙனம் சரியை கிரியை ஆகிய தொழில்களைச் செய்யாததையே 'தண்மலர் இட்டு முட்டாது இறைஞ்சேன்' என்னும் உரை யால் தம் இரண்டாம் தவருகக் கூறியிருப்பதை அறியலாம். எனவே, இப்பரவினையைச் செய்யாததைப் பின்னும்,

"பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்'

(திருச்சதகம்-14)

எனக் கூறுவதையும் நாம் காணலாம்,

(தொடரும்)

அறிவின் மாட்சி

வித்துவான்; திரு. கோ. கோவிந்தசாமி அவர்கள்:
தமிழாசிரியர்
திருமுக்கூடல் [அஞ்சல்]
செங்கற்பட்டு மாவட்டம்

மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள வேற்றுமை யாது? மாக்களினும் மக்கள் உயர்ந்தவராக இருப்பது ஏன்? அறிவுடைமைதான் காரணம். மாக்களுக்கு அறிவு ஐந்துதான். மக்களுக்கு அறிவு ஆறு. அந்த ஆறுவது அறிவு எது? நன்மை தீமை எனப் பகுத்தறியும் அறிவேயாகும். அவ்வறிவு இல்லையேல் மக்கள் மக்களாகார். அன்னார் மாக்களாகவே கருதப் படுவர். மாந்தர் அனைவருக்கும் இயல்பாகவே அறிவு உள்ளது. அந்த அறிவு கல்வி கற்பதன் மூலம் சிறப்படைகிறது. அறிவுடையவர் வருங்காலத்தில் வரக்கூடியவற்றை எளிதில் அறிவர். அறிவற்றவர்கள் அவ்விதம் அறிய இயலாது.

> அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
> அஃதறி கல்லாதவர்.

எனக்கூறுகின்றார் வள்ளுவர் பெருந்தகை.

மனிதனுக்கு அழிவு வராமல் காக்கக்கூடிய ஒரே கருவி- அறிவேயாகும். அறிவிற் சிறந்தவனை எதிர்க்க முற்படினும் அந்த அறிவுடைமையே அவனுக்கு அரணாக இருந்து பாது காவலை அளிக்கும்.

> "அறிவு அற்றங்காக்கும் கருவி செறுவார்க்கும்
> உள்ளழிக்கலாகா அரண்"

அறிவற்றவர் நட்பு எத்தகையது? அறிவற்றவரை நட்பினராகக் கொள்ளின் அஃது நமக்குப் பெருந்தீங்கு பயக்கும். வெட்கப்பட வேண்டிய செயல்களுக்கு வெட்கப்படாதவராய்த் தீய செயல்களைச் செய்யும் அற்பரை விரும்பி நடத்தி

அவரோடு கூடிவாழ்தல், நச்சுக் கிருமிகளை உள்ளே விட்டுப் புண்ணை மூடிவைப்பது போன்றதாகும்.

> ''நாணுர் பரியார் நயனில செய்தொழுகும்
> பேணு அறிவிலா மாக்களைப்–பேணி
> ஒழுக்கி அவரோடுடனுறை செய்தல்
> புழுப்பெய்து புண் பொதியுமாறு''

கள்ளி மரத்தில் அதிக மலர்கள் இருப்பினும் அவை சூடுவதற்குப் பயன்படாமையால் ஒருவரும் பறிக்கமாட்டார்கள். அதுபோலக் கீழ் மக்களிடத்தில் மிக்க செல்வமிருப்பினும் அவர்கள் கொடுக்கும் பண்பு இல்லாதவராதலின் அவர்களை அறிவுடையோர் சேரமாட்டார்கள்.

உயர்ந்தபொருள் இழிந்தோர் வாயிலும், இழிந்தபொருள் உயர்ந்தோர் வாயிலும் வரலாம். பகைவர் வாயிலிருந்து நற்செய்தியும் நண்பர் வாயிலிருந்து தீய செய்தியும் உண்டாதல் இயற்கையாகும். ஆதலின் கூறுகின்றவர் யார் எனக்கருதாமல் அவர் கூறுகின்ற செய்தியை ஆராய்ந்து, ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பின் ஏற்றுக்கொள்ளுதலும், இல்லையேல் அதனை ஒதுக்கித் தள்ளுதலும் அறிவுடைமையாகும்.

> ''எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பதறிவு''

மனித மனம் நிலையற்றது. அது ஒருவழிநில்லாது சென்று கொண்டே இருக்கும். நன்மையைவிடத் தீமையையே விரைந்து மேற்கொள்ள முயலும். அத்தகைய மனத்தையும், மனம் சென்றவழியே செல்லும் உடலையும் தீமை செய்யும் செயலினின்று விலக்கி நன்மைதரும் செயலில் செல்லவிடுவது அறிவாகும்.

பிறர் அறியமுடியாதவற்றையும் எளியமுறையில் அறிந்து கொள்ளுமாறு கூறிப், பிறர்கூறும் நுட்பமான பொருளையும் தானே அறிந்து கொள்ளும் அறிவுடையார்க்குக் கடினம் என்பது இல்லை.

அரண்மனை யொன்றில் அரசனிட்ட பணியைச் செய்து வந்த–பணியாள் ஒருவன், ஒருநாள் அரசனை அணுகி அரசே நான் நாள் முழுதும் உங்களுக்காக உழைக்கிறேன். எனக்கு

ஓய்வென்பதே இல்லை. நான்பெறும் ஊதியமோ மிகவும் குறைவாகவே உள்ளது. ஆனால் ஒரு பணியும் செய்யாமல் அமர்ந்திருக்கும் அமைச்சருக்கு என் ஊதியத்தைப்போன்று பன்மடங்கு ஊதியம் கிடைக்கிறது, ஏன் இந்த வேறுபாடு. இது நீதியற்ற செயல் என முறையிட்டான். அரசன் அவனை நோக்கிப் பணியாளனே... அவரவர் பணிகளுக்கு ஏற்ப ஊதியம் அளிக்கப்படுகிறது. அதைச்சொன்னாலும் உனக்குப்புரியாது. நான் இப்போது ஓர் பணியை இடுகின்றேன். அதைச் சரியாகச்செய்து முடிப்பாயாயின் அமைச்சருக்குக்கிடைக்கும் ஊதியம் உனக்கும் கிடைக்கும் என்றான். பணியாளனும் அதற்கு இசைந்தான்.

அரசன் அவனை அரண்மனையின் மேன்மாடிக்கு–அழைத்துச்சென்று, திசை ஒன்றைச் சுட்டிக்காட்டி....அதோ நம் சாலையில் வரிசையாகச்செல்லும் வண்டிகளைப்பற்றி நீ அறிந்து வரவேண்டும் என்றான்.

பணியாளன் உடனே விரைந்து சென்று சிறிது நேரங் கழித்துத் திரும்பினான். அரசனைப் பார்த்து அரசே அந்த வண்டிகள் நகரத்தின் தென்பகுதிக்குச் செல்கிறதாம் என்றான். அரசன் அவனிடம் அந்த வண்டிகளில் என்ன இருக்கிறது. அதைக் கேட்டாயா......என்றான்.

இல்லை அரசே.......இதோ இப்போதே சென்று கேட்டு வருகிறேன் எனக்கூறிச் சென்று, அதனை அறிந்து கொண்டு திரும்பிய அவன் அந்த வண்டிகளில் நெல் மூட்டைகள் உள்ளன என்றான்.

நெல் மூட்டைகளா? அவற்றை வண்டிகளில் எடுத்துச் செல்வதற்குரிய காரணம்? விற்பனைக்கு எனின் மூட்டை என்ன விலை? நெல் வகைகள் எத்தனை? மூட்டைகளை ஏற்றிச் செல்லும் வண்டிகள் எத்தனை?......என்பதை அறிந்தாயா? என்றான்?

இல்லை அரசே......நான் விரைவாகச் சென்று அறிந்து வருகிறேன் எனக்கூறிப் புறப்பட்டான் பணியாள், அவனைத் தடைசெய்த அரசன்......பணியாளனே.......நீ சிறிது ஓய்வு கொள்........இப்போது அமைச்சரை அனுப்புகிறேன்...,எனக்

கூறி......அமைச்சரை அழைத்துச், சாலையில் செல்லும் வண் டிகளைப் பற்றி அறிந்து வருமாறு அனுப்பினுன், சாலையில் செல்லும் வண்டிகளினருகில் சென்று உடனே திரும்பிவந்த அமைச்சர் நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்லுல் வண்டிகள் எங்கிருந்து புறப்பட்டு எங்கே செல்கின்றன. நெல்வகைகள் என்னனென்ன? வண்டிகளிலிருந்த மூட்டைகள் எத்தனை? வண்டிகளின் மொத்த எண்ணிக்கை......எத்தனை பேர் வண் டிகளை ஓட்டிச் செல்கின்றனர். என்ற செய்திகள் அனைத் தையும் அரசனிடம் கூறினுர்.

பணியாளனை நோக்கிய அரசன்......பணியாளனே....... உன்னை வண்டிகளைப் பற்றி அறிந்து வருமாறு கூறியபோது செய்திகள் அனைத்தையும் உன்னுல் அறிந்துவர இயலவில்லை. அமைச்சரோ ஒருமுறை சென்று வந்தவுடனே அவற்றைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் விளக்கமாகக் கூறிவிட்டார் இதிலிருந்து யாருக்குத் திறமை அதிகம் என்பதை நீயே உணர்ந்து கொள். அவரவர் திறனுக்கேற்ற ஊதியமே அளிக் கப்படுகிறது என்ருன்.

அதைக் கேட்ட பணியாள் உண்மையை உணர்ந்து தலை குனிந்தவாறு சென்று விட்டான்.

அறிவுடையவன் சொல்லுகின்ற சொற்கள் அரியபொரு ளுடையன வாயினும் கேட்போர்க்கு இனியபொருளாகுமாறு அவர் மனம் கொளச் சொல்லிப் பிறரிடம் கேட்கும் சொற் கள் நுண்ணிய பொருளாயினும் அதனைக் காண வல்லவ னுவான்.

உலகமாந்தர் அனைவரையும் நட்போடு தழுவிக் கொள் வதே சிறந்த நெறியாகும். அந்த நட்பை மலர்தலும் கூம்புத லுமின்றி ஒரேதன்மையதாக ஆக்குவது அறிவேயாகும்.

இவ்வுலகில் பிறந்த சான்ருேர் எத்தகைய வழியில் நடக் கிருர்களோ அத்தகைய வழியில் உலகினரோடு நடப்பதுதான் அறிவுடைமையாகும்.

கீழ்மக்கள் பழிச்செயல்களுக்குச் சிறிதும் அஞ்சார். தீய செயல்களுக்கு, அஞ்சவேண்டிய செயல்களுக்கு அஞ்சாமலி ருப்பது அறியாமையே யாகும். அறிவுடையோர் பழிச்செயல்

களுக்கு எப்போதும் அஞ்சி நடப்பர் அஞ்ச வேண்டிய வற்றிற்கு அவர்கள் அஞ்சுவர்.

மாந்தன் ஒருவன் அறிவினைத் தவிர வேறொன்றும் இல்லாதவனாயினும் அவன் தனக்குத் தேவையான வற்றைக் காலத்துக்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்ள வல்லவனாதலின் எல்லாப் பொருளும் உடையவனாவான். அறிவில்லா மாந்தன் எல்லாப் பொருளும் உடையவனாயினும் அவற்றைக் காத்தற்கு வேண்டிய அறிவு என்னும் கருவி இன்மையால் ஒன்றுமில்லாதவனே யாவான்.

அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடையரேனும் இலர்.

தமக்கு துன்பம் வருமுன்பு அதனை அறிந்து காத்துக் கொள்ளும் மாந்தனுக்கு எப்போதும் துன்பம் என்பதே இல்லை. அவன் அஞ்சிநடுங்கும் படியாக வரக்கூடிய துன்பம் எதுவும் அவனுக்கில்லை.

பூத்தாலும் காயாத மரங்களும் சில உள்ளன. அது போன்று நன்மையை அறியாதவர் வயதில் முதிர்ந்தவராயினும்அறிவால் முதிராதவரே யாவர். அறிவு நூல்களைக் கற்றுத் தெளியாத வரும் அத்தன்மையரே யாவர். பாத்தி கட்டிப் புதைத்தாலும் முளையாத வித்தும் உண்டு. அதுபோன்று அறிவற்றவனுக்கு எவ்வளவு தான் நன்மையை எடுத்துக் கூறினும் அறிவு தோன்றாது.

பிறர் தனக்குச்செய்த நன்மைகளைப் பலர் அறியச்சொல்லுதலும், பிறர் செய்த தீமைகளை மறத்தலும், துன்புறும் உயிர்களுக்கு, ஊன்றுகோல் போல் நின்று உதவி புரிதலும், பிறர்பொருளை வஞ்சித்தலை விடுதலும், மானமிழக்கநேரின், மானத்தைக்காக்க உயிரை விடுதலும் ஆகிய அனைத்தும் அறிவுடையார்க்குரிய பண்புகளாகும்.

நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த மணிமாலை, பொன் மாலை, சந்தனக்குழம்பு, மலர்மாலை ஆகிய இவைபோன்ற அணிகள் அனைத்தும் ஒருவனுக்கு அழகு செய்வதில் ஆடைக்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

[சிவ சிவ

"வேடதாரி"

திரு. இரா. சிவானந்தம், B Com, அவர்கள்,
வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.

பிறப்பிறப்பற்ற சிவபரம் பொருள், இவ்வண்ணன், இத் தன்மையன் என எழுதிகாட்ட வொண்ணுத முழுமுதற்கடவுள். அடியார்கள் பொருட்டு. அருள்பாலிக்கும் வண்ணம், எடுத்திட்ட வேடங்கள்தான் எத்தனையெத்தனை!

எந்தைபிரான் உருவமாய், அருவமாய், அருவுருவுமாய் கொண்ட கோலம் என்னென்பது? திருமுறை ஆசான்களும் சமய ஞானிகளும், சாதாரண மக்கள் அறிய வேண்டுமென இறையவர் பூண்ட திருவேடங்களைதெளிவாகப்படம்பிடித்து காட்டியுள்ளனர்.

உருவமாய் நின்ற சிவபெருமானின் மேனி,

"உருவளர் பவளமேனி"
"சங்கேயொத்தொளிர் மேனிச்சங்கரன்" – சம்பந்தர்
"பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்" – நாவுக்கரசர்

(முன் பக்கத் தொடர்ச்சி)

குப்பிற்பட்டனவேயாம். ஆதலின் அறிவினுலாகிய பெருமை ஒரு சிறிதும் இல்லாத ஒருவன் செல்வம் முதலியவற்ருல் பெருமையுற—எவ்விதம் இயலும்? இயலாது.

"அறிவினுல் மாட்சி யொன்றில்லா ஒருவன்
பிறிதினுல் மாண்ட தெவனும்?–பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலேயும் இன்ன
அணியெல்லாம் ஆடையின்பின்"

வானிலுள்ள பல்லாயிரக்கணக்கான விண்மீன்கள் ஒன்று சேரினும் பரந்த இருளைத், திங்களைப்-போன்று ஒளிதந்துநீக்க மாட்டா. அதுபோன்று அறிவில்லாதவர் ஆயிரம்பேர் கூடினும் இவ்வுலகின்கண் அறிவால் மாட்சிமைப்பட்ட ஒருவனுக்கு ஒப்பாகமாட்டார்கள் அறிவின் மாட்சி மாந்தர்க்குச் சிறப்பைத் தருவதாகும்.

என்பன போன்ற வரிகளால் பவளம் போன்ற பிரகாசம் உடைய "பொன்னார் மேனியன்" என்பதனை அறிகிறோம். அத்தகு மேனியில் "மதயானையுரிபோர்த்து", "புலித்தோலை அரைக்கசைத்து", ("கொல்புலித்தோல் நல்லாடையாக உடுத்து"), மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்து, தூவெண்மதிசூடி, தோடுடைய செவியனாய் பொரங் கரவு உடலில்தவழ, மாணிக்கவாசகர் குறிப்பிட்டவாறு "மலை மகளையொருபாகம் வைத்தலுமே, மற்றொருத்தி சலமுகத்தால் அவன் சடையிற்" கொண்டு, வெள்ளைவிடைமேல் காட்சி தரும் வேடம் கொண்டவர் சிவபிரானார். அந்த "நயனங்கள் மூன்றுடை நாயகன்" முக்கண்ணனாக, திரிசடையும், திரி சூலமும் கொண்டு, "கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை மிடறினில் அடக்கிய வேதியா"னதலால் திருநீலகண்டராகக் காட்சி அளிக்கின்றார். கோளறுதிருபதிகத்தின் ஒவ்வொரு பாடலில் முதல்நான்கு வரிகள் இறைதிருமேனியை வர்ணிக் கிறது.

அருவத்திருமேனியாக "பண்ணிடைத் தமிழொப்பாய், பழத்தினிடை சுவையொப்பாய்" என்றெல்லாம், தூணிலும், துரும்பிலும், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் வேடமே ஒரு நாடகமாகும்.

உருவருவத் திருமேனியாக, ரூபாரூபானகக் கொண்ட வேடந்தான் லிங்க வடிவம். ஊனக்கண்களுக்கு அது உருவ மற்ற ஒன்றாகவும், ஞானக்கண்களுக்கு சக்தி, சிவ அம்சங்களை விளக்கும் ரூபமாகவும் தெரியும். இரண்டும் கலந்த இந்த நிலையை அருவுருவம் என்கிறோம். இத்தருணத்தில்,

> "அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
> பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு........."

என்று ஸ்ரீகச்சியப்பர் குறித்த சோதி வடிவு எண்ணற்குரியது. அப்படிப்பட்ட ஒளிவடிவின்,

> "அடியொன்று பாதலம் ஏழிற்கும் அப்புறம்பட்டது-இப்பால்
> முடியொன்று இவ்வண்டங்கள் எல்லாங் கடந்தது......"

எனவேதான் இதனை

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி..."
திருமாலுங் பன்றியாய் சென்றுணராத் திருவடி"

என்கின்றார் ஸ்ரீமாணிக்கவாசகர். அதனை அவர்,

"சோதியே சுடரே சூழொளி விளக்கே"

என்றெல்லாம் புகழ்கின்றார் இத்தகு அருவ, உருவ, அருவுருவ வேடமதனை ஸ்ரீசேக்கிழார்,

"உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்......"

என தொகுத்துரைக்கின்றார். இப்பாடலில் "அம்பலத் தாடுவான்" என்னும் பதத்தால் ஸ்ரீநடராஜப் பெருமானின் திருநடனத் தோற்றம் முன் வருகிறது. அத்திருநடனம் முதலும் முடிவும் இல்லாத திருக்கூத்து ஆகும், அத்திரு நடனத்தின் தத்துவந்தான் என்ன அருமையானது!

உடுக்கை ஏந்திய சுரம்	—	உலகசிருட்டி
அபயகரம்	—	காத்தல்
தீ ஏந்திய கரம்	—	அழித்தல்
ஊன்றிய திருவடி	—	மறைத்தல்
தூக்கிய திருவடி	—	அருளல்
அதனைக் காட்டும் கை	—	இத்திருவடியை உய்வு பெற அடைக என்பது

அதனை,

"தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்–முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என மனவாசகங்கடந்தார் விவரிக்கின்றார்

ஒரே இறைவனாகிய வேதநாயகன், ஆன்மாக்கள் பொருட்டு கொண்ட மூர்த்தங்கள் 25 என வேதாகாமங்கள் கூறுகின்றன. அம்மூர்த்தங்களில் ஸ்ரீவிநாயகர், ஸ்ரீமுருகன், சக்திக்கு இடபாகத்தைதந்து, கொண்ட உமையொருபாகனுர் வேடம் என்பன குறிப்பிடத்தக்கன.

அதுமட்டுமல்லாது 64 திருவிளையாடல்கள் பொருட்டும், 63 நாயன்மார்கள்குறித்தும் ஸ்ரீபொன்னம்பலவாணர் புனைந்த அற்புதமான வேடங்களைத்தான் எங்ஙனம் விவரிப்பது?

இதனால்தான் சம்பந்தப்பெருமான் "பலபல வேடமாகும்..." என்றாரோ?

சித்தராய், சுந்தரர் சித்தரித்த பித்தராய், வணிகராய், கிழ வேதியராய், குதிரை சேவகராய், புலவராக, வலைஞராக, நர மாமிசம் உண்ணும் வடநாட்டு கபாலிகராக கொண்ட எண்ணற்ற திருவேடங்களை எண்ணும்போது நமது ஞானத்தலைவன் சிறந்த "வேடதாரி" என்பதில் தவறேது?

பன்றி உருவில் வந்த திருமாலுக்கு தன் திருவடியைக் காட்டாத இறையவர், தாய்ப்பன்றியைஇழந்த பன்றிக்குட்டிகளுக்காக தாய்ப்பன்றியாகவும் கொண்ட வேடம் என்சொல்வது?

ஸ்ரீமீனாட்சியை மணம்கொள்ளும் பொருட்டு, அழகிய பட்டாடை உடுத்து, செவிகளில் பொற்குண்டலமும், மார்பில் முத்து, மாணிக்கமாலைகள் அணிந்து, திருவடிகளில் சிலம்பு ஒலிக்க வந்து, தன்னழகால் பிறரைச் சொக்க வைத்த சொக்கர் வேடந்தான் யாது வரைவது?

அத்தகுவேடத்தவர், பிட்டுவிற்கும் ஒரு கிழவிபொருட்டு அழுக்கேறிய துணியுடன், தலையில் சும்மாட்டின்மேல் கூடையினை கவிழ்த்து, தோளில் மண்வெட்டி கொண்டு, கூலியாளாய் தாமரைத் திருவடி வீதியில் தோய வந்த காட்சியினை எண்ணுங்கால் உள்ளம் உவக்கிறது.

இராசசேகர பாண்டிய மன்னன், இறைவர் ஒரே திருவடியை தூக்கி ஆடிக்கொண்டு இருப்பதால், அத்திருவடி நோகுமே என்று வருந்திய விசித்திரமான துயரையும் நீக்கும் வண்ணம் இடத்தாளை ஊன்றி, வலத்தாளை மேலே எடுத்து வீசிக் கால்மாறியாடிய வேடம் விந்தைக்குரியது.

இவ்வாறு வேண்டிய வேண்டியாங்கு வேடம் ஏற்ற இறையவர், ஸ்ரீசுந்தரர் மீது பரவையார் கொண்ட பிணக்கு

நீங்குமாறு தூதுவராக, ஆதி சைவ அந்தணர் வேடமும் கொண்டார்.

இதனையெல்லாம் மாணிக்கவாசகரின்,

"வேறு வேறு உருவும்
வேறு வேறு இயற்கையும்
நூறு நூறு ஆயிரம் இயல்பினதாகி ஏறுடை ஈசன்"

என்னும் திருவாக்கால் ஈசன் கொள்ளும் வேடத்தின் அளவின்மையை அறிகிறோம்.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"

என மாணிவாசகரே, இப்படி இப்படியெல்லாம், இவ்விவ் விடங்களிலெல்லாம் இருக்கின்ற, கலந்து ஒளிர்கின்ற இறைவனே எனப் புகழ்ந்துவிட்டு, முடிவில் உம்மை எப்படி புகழ்ந்து வாழ்த்துவது, வணங்குவது என நயம்பட, அதிசயத்து வியக்கும்போது, நாம் எப்படி வேடமிலா வேடத்தானின் வேடத்தை உரைப்பது? எழுதுவது?

"ஒரு நாமம் ஓர்உருவம் ஒன்றும் இல்லாற்காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ".

திருச்சிற்றம்பலம்

நீலப்பாடி அத்திப்புலியூர் பள்ளி மாணவர்

மதிய உணவு வகையரு நிதி. ரூ. 5,500-

நீலப்பாடி அத்திப்புலியூர் ஆகிய கிராமங்களில் பின் மூன்ருவது பாராவில் குறித்துள்ள வண்ணம் மதியஉணவு முதலிய தருமங்களை நடத்துவித்தற் பொருட்டு, நம் முன்னோர்களிடத்திலும் நம்மிடத்திலும் வழிவழி அன்பு பூண்டொழுகுபவரும், நாகப்பட்டினம் தாலுக்கா அத்திப்புலியூர் எஸ் சுந்தரமுதலியார் குமாரரும் தற்போது நமது நீலப்பாடி ஏஜெண்டாக இருப்பவரும் ஆகிய எஸ் சுப்பையா முதலியார் செலுத்திக் கொண்டிருக்கும் ரூ 5,000 /- ரூபாய் ஐயாயிரத்தோடு நாமும் ரூ 500/– சேர்த்து நம்மால் (திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21- ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்) இத்தருமம் 28– ஆவது தருமமாக நிறுவப்பெற்றது. இது **"நீலப்பாடி – அத்திப்புலியூர் பள்ளி மாணவர்கள் மதிய உணவு வகையரு நிதி"** எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5,500/–/ ரூபாய் ஐயாயிரத்து ஐந்நூறு/ இது கும்பகோணம் சிட்டி யூனியன் பாங்க் திருப்பனந்தாள் கிளையில் ஆண்டொன்றுக்கு 8-1/4% வட்டி தரக்கூடிய நீண்டகால முதலீடாகக் 61 மாதங்களுக்கு முதலீடு செய்யப் பெற்றுள்ளது. பிக்சட் டெபாசிட் எண். 31452; தேதி. 25-7-1973; ரூ. 5,500/-. இது நம்மாலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்று வரும்.

3. இம்முதற் பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகையில் இத்தருமத்தை நடத்துவதற்குரிய நிர்வாகச் செலவுகள் போக எஞ்சிய தொகை பிற்கண்டவாறு தருமங்கள் செய்யப் பயன்படுத்தப் பெறும்:–

அ. நீலப்பாடி ஸ்ரீநாகநாதசுவாமி ஆலயத்திலும், அத்திப்புலியூர் ஸ்ரீ சிதம்பரேசுவரசுவாமி ஆலயத்திலும் சுவாமி அம்மனுக்கு நாம் குறிப்பிடும் ஒரு நாளில் விஷேச அபிஷேகஅலங்கார நைவேத்தியங்கள் நடத்துவித்தற் பொருட்டு ஆலயம் 1க்குரூ. 25/- வீதம் ரூ. 50/மட்டும் செலவிடப்பெறும்.

ஆ. கீவளூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நீலப்பாடி தொடக்கப் பள்ளியில் கல்வி கற்கும் ஏழைச் சிறுவர்களுக்கு மதிய உணவு அளிப்பதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 125/- ம், அத்திப்புலியூர் உயர்தொடக்கப் பள்ளியில் கல்வி கற்கும் ஏழை சிறுவர்கட்கு மதியஉணவு அளிப்பதற்கு ரூ. 250/-ம் செலவிடப் பெற்று வரும்.

4. /அ/ மதிய உணவுத் தெபகைகளை மாதந்தோறும் ரூ. 12-50 வீதம் 10 மாதங்கட்கு நீலப்பாடி தொடக்கப் பள்ளி தலைமையாசிரியருக்கும், ரூ. 25/-வீதம் அத்திப்புலியூர் உயர் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியருக்கும் ஆண்டு தோறும் அனுப்பி வைக்கப் பெறும். இத் தொகையைக் கொண்டு இதுகாறும் மதிய உணவு அளிக்கும் மாணவர்கள் தொகையை அதிகரித்தும், அரசாங்கம் தரும் உதவியையும் பெற்றுக் கொண்டு அவ்வப் பள்ளிதலைமை ஆசிரியர்கள்மதிய உணவு நடத்தி வரவேண்டியது. அங்ஙனம் மதிய உணவு அளிப்பதாகச் சான்றிதழும் நமக்கும் நமக்குப்பின் வரும் ஸ்ரீ காசிமடத்து அதிபர்களுக்கும் அனுப்பி வரவேண்டியது.

/ஆ/ ஷ நீலப்பாடி அத்திப்புலியூர் ஆகிய ஊர்களிலுள்ள இரு சிவாலயங்களிலும் நாம் குறிப்பிடும் ஒருநாளில் சிறப்பு அபிஷேக அலங்கார நிவேதனங்களை நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி ஆண்டுதோறும் நம்மால் நடத்தப் பெற்று வரும்.

5. வட்டி வரவிற்கேற்ப ஷ தொகைகள் கூட்டவும் குறைக்கவும் பெறும். இவ்வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் செலவு செய்யப் பெறமாட்டாது. இம்முதற் பொருள் நம் பேரிலும் நமக்குப் பின்வரும் ஸ்ரீ காசிமடத்து அதிபர்கள் பேரிலும் இருந்து வரும். இம்முதற் பொருள் திருப்பியளிக்கப் பெற்றதும் அதிகவட்டி வரக்கூடிய நீண்ட கால முதலீடுகளிலோ அல்லது அரசியல் கடன்தாள்களிலோ முதலீடு செய்யப் பெறும்.

Tirupanandal
25—7—1973 } (Sd.)Kasivasi Muthukumaraswami Tambiran

குறிப்பு: 4-ம் புஸ்தகம் 59-ம் வால்யூம் 103 முதல் 105 வரை பக்கங்களில் 1973-ம் வருஷத்திய 27-ம் நம்பராக 26-7-1973 உ திருவிடைமருதூரில் ரிஜிஸ்தர் செய்யப் பட்டது.

சிவ சிவ]

திருவலஞ்சுழி சுவேத விநாயகர் பச்சைக்கற்பூரம்
2-ஆவது அபிஷேக நிதி முதற்பொருள் ரூ. 1,500/-.

காவிரி வலம் சுழித்துச்சென்றமையால் திருவலஞ்சுழி என்னும் பெயரையுடையதும், தேவர்கள் விநாயகரை வணங்காமல் பாற்கடலைக் கடைந்தமையின் நஞ்சுவரப் பின் பாற்கடல் மணலால் விநாயகரை ஸ்தாபித்து வணங்க, அமிர்தம் வர, அவ்விநாயகரை இந்திரன் பூசித்துத் திருவலஞ்சுழியில் இருந்து அதனை எடுக்க முடியாமையில் திருவலஞ்சுழியிலேயே வீற்றிருந்து ஆண்டுதோறும் ஆவணித்திங்கள் வளர்பிறைச் சதுர்த்தியில் தன்னை வழிபடுவோர்க்கு எல்லாப்பேறுகளும் வழங்கும் சுவேத விநாயகர் எழுந்தருளியுள்ள தலமாகியதும், திருமாலும் மார்கழித்திங்கள் வளர்பிறைச்சஷ்டியில் விநாயகரைப்பூசிக்கும் வரலாறுடையதும், திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடியருளிய தேவாரத்தமிழ் பெற்றுள்ளதும் ஆன **திருவலஞ்சுழியில்** கபர்த்தீசர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள **சுவேத விநாயகர்** ஆகிய வெள்ளைப் பிள்ளையாருக்கு நமது முன்னவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாதந்தோறும் சுக்லபக்ஷ (வளர்பிறைச்) சதுர்த்தியில் பச்சைக்கற்பூர அபிஷேகத்திற்கு 27—1—1971ல் முதற்பொருள் நிறுவியருளினர்கள். ஆவணி கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியாகிய சங்கடஹர சதுர்த்தியில் விநாயகரைப் பூசித்துத் தருமபுத்திரர் வனவாசத்தில் அடைந்த துன்பங்களைப் போக்கிக்கொண்டார். சங்கடஹர சதுர்த்தியில் விநாயக விரதம் அனுஷ்டித்தால் மக்கட்குச் சம்பத்து சுகம் முதலியன உண்டாகும். ஆகவே ஒவ்வொரு மாதமும் சங்கடஹர சதுர்த்தியாகிய கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியில் திருவலஞ்சுழியில் எழுந்தருளியுள்ள சுவேத விநாயகருக்குப் பச்சைக்கற்பூரம் அபிஷேகம் செய்வித்தற்பொருட்டு இத்தருமம் நம்மால் ஸ்ரீ காசிமடத்து 21-ஆவது அதிபர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்** சுவாமிகள் அவர்களால் 29-ஆவது தருமமாக நிறுவப்பெற்றுள்ளது. இது **"திருவலஞ்சுழியில் சுவேத விநாயகர் பச்சைக் கற்பூர 2-ஆவது அபிஷேக நிதி"** எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 1,500/- ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு. இது ஆண்டு ஒன்றுக்கு $7\frac{3}{4}\%$ வட்டி தரக்கூடிய நீண்ட கால முதலீடாகக் கும்பகோணம் ஸ்டேட் பாங்கில் 61 மாதங்கட்கு முதலீடு செய்யப் பெற்றுள்ளது.

பிக்சட் டெபாசிட் எண் C 560239 தேதி 26—7—1973 ரூ 1,500/–. இது நம்மாலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீகாசி மடத்து அதிபர்களாலும் பரிபாலிக்கப்பெற்று வரும்.

3. (அ) இம்முதற்பொருளினின்றும் கிடைக்கும் வட்டித்தொகையில் இத்தருமத்தை நடத்துவதற்குரிய நிர்வாகச் செலவுகள் போக எஞ்சிய தொகை முழுவதும் பன்னிரண்டு நாட்களில் அதாவது எல்லா மாதங்களிலும் கிருஷ்ண பக்ஷத்தில் வரும் சதுர்த்தி நாளில் /சங்கடஹர சதுர்த்தியில்/ திருவலஞ்சுழியில் ஸ்ரீகபர்த்தீசுவரர் கோயிலில் முன்புறத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சுவேத விநாயகருக்குப் பச்சைக்கற்பூரம் அபிஷேகம் செய்வித்தற்பொருட்டுச் செலவிடப்பெற்று வரும். சதுர்த்தி ஒன்றுக்கு ரூ 7/– வீதம் 12 சதுர்த்திகளுக்கு மொத்தம் ரூ 84/– பச்சைக்கற்பூரம் அபிஷேகம் செய்வதற்குச்செலவு செய்யப்பெற்று வரும். எஞ்சிய தொகை நம் விருப்பம்போல் ஷை பச்சைக்கற்பூர அபிஷேகத்திற்கே பயன்படுத்தப்பெறும்.

4. மேற்படி வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் செலவு செய்யப்பெறமாட்டாது.

5. இம்முதற்பொருள் நம் பேரிலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர்கள் பேரிலும் இருந்து வரும் இம்முதற்பொருள் திருப்பியளிக்கப்பெற்றதும் அதிக வட்டி வரக்கூடிய அரசியல் கடன்தாள்களிலோ அல்லது நிலையான முதலீடுகளிலோ முதலீடு செய்யப்பெற்று வரும்.

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே-சம்பந்தர்

Tirupanandal
27—7—1973 } (Sd.) Kasivasi Muthukumaraswami Tambiran

Registered at the Tiruvidaimarudur Sub-Registrar's Office on 30—7—1973 as document No. 30/1973 Book-4, Volume 59 Pages 111 to 113.

மூன்றும் திருமுறையின்
முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

53: திருவானைக்கா பண்: கௌசிகம்

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவிலின் மொழித் தேவிபாக மாயினன்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க்கு ஏதுமேதம் இல்லையே.

பொழிப்பு: வானமாகிய பரணில் உள்ள வெண்மையான பிறைமதி என்றும் நிலைத்துத் தங்குகின்ற நீண்ட சடையோடு, தேனைக் கலத்தலால் உண்டான இனிமையையுடைய மொழி பேசும் உமாதேவியை இடப்பாகமாக உள்ளவனும் திரு வானைக்காவல் என்னும் தலத்துக்குத் தலைவனும் ஆகிய சிவ பெருமானை அடைக்கலமாக வாழ்பவராய்ப் பிற துணை வேண்டும் என்பார்க்கு எவ்விதத் தீங்கும் இல்லை.

வானை – ஐ சாரியை; காவு – பரண்; தேனைக்காவில் என் புழிக்காவில் என்பது கலவுதலில் என்பதன் மருஉ. அபயம் - பயமில்லாத இடம். ஞானசம்பந்தர் ஆனைக்கா இறைவன் முன் இப்பதிகம் பாடியருளினர். இப்பதிகத்தைக் கற்பவர் களது வல்வினைகள் மாய்ந்து விடும்.

54. பொது பண்: கௌசிகய்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

பொழிப்பு; அந்தணர்களும் தேவர்களும் பசுக்கூட் டமும் வாழ்க; மேகத்திலிருந்த குளிர்ந்த நீர் பொழிவதாக, பாண்டிய மன்னனும் உயர்வானுக; தீய பண்பு அழிவதாக; எல்லா உயிர்களும் சிவபெருமானது திருநாமத்தை நினைப் பதாக. உலகத்து வாழ்வாரும் தமது துயர் தீர்வராக.

வீழ்க–பொழிக; வேந்தன்என்றது ஈண்டுப் பாண்டியனை தியது ஆழ்க என்றும் எல்லாம் அரன் நாமமே சூழ்க என்றும்

முடிபறிந்து பிரிக்க வேண்டும். தீயோர் அழிக என்னுது தீய பண்பு அழிக என்றுர். அவரும் திருந்தி வாழ வேண்டும் என்ற கருணையினுல், ஞானசம்பந்தர் வையை யாற்றில் ஏடிட்டுப் புனல் வாதம் செய்தபோது இப்பதிகம் அருளிச் செய்தார். இதற்குத் திருப்பாசுரம் என்ற சிறப்புப் பெயர் உண்டு. இப்பதிகத்துக்குச் சேக்கிழார் பெரியபராணத்தில் விளக்கம் செய்திருக்கிருர். இப்பதிகத்தைப் பயின்றவர்கள் வானேர் உலகாள்வர்.

55. திருவான்மியூர் பண்: கௌசிகம்

விரையார் கொன்றையினுய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கையொர் பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மி யூருரையும்
அரையா உன்னையல்லால் அடையா தெனது ஆதரவே.

பொழிப்பு: மணம் நிறைந்த கொன்றை மலேயுடைய வனே! நஞ்சை அயின்ற கண்டத்தை உடையவனே! பொருள் பொதிந்த பல புகழை உடையவனே! உமாதேவி யை ஒரு பக்கத்தே உடையவனே! அலேமிகுந்த தெளிந்த கடல் சூழப்பெற்ற திருவான்மியூர் என்னும் தலத்தில் எழுந் தருளியிருக்கும் அரசனே! எனது அன்பு உன்னையல்லாமல் வேறெவரிடத்தும் சேராது.

விரை–மணம்; உரை-பொருள்; திரை–அலே; தெண் கடல்–தெளிந்தகடல். கலக்கினும் தன் கடல் சேருகாதே என்றதும் காண்க. வான்மீக முனிவர் பூசித்துப் பேறுபெற்ற தால் திருவான்மியூர் எனப்பெயர் வந்தது. ஆதரவு–அன்பு; ஞானசம்பந்தர் திருவான்மியூரில் சிலநாள் தங்கி இருந்த போது இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தை ஏத் தவல்லவரது கொடு வினைகள் நீங்கும். (தொடரும்)

உ
சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

கன்னியாகுமரி ஆச்சிரமம் திருப்பனந்தாள்

திருமுறை அன்னம்பாலிப்பு வகையரு நிதி

சுசீந்திரத்தில் திருவாதிரைத் திருவிழாவில்

தேவார கோஷ்டி

திருப்பனந்தாள், ஸ்ரீ காசி மடத்து அதிபர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ

காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்

அவர்களின் ஆணையின் வண்ணம் நடத்தப்பெறுவது

6—1—1974 முதல் 8—1—1974 முடிய

சுசீந்திரம் ஸ்ரீ தாணுமாலயசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் மார்கழித் திங்கள் திருவாதிரைத் திருவிழாவில் 1974-ம் வருஷம் ஜனவரி மாதம் 6. 7, 8-ம் தேதிகளில் ஷை நிதியின்படி தேவார இன்னிசைக் கோஷ்டி நடத்தப்பெறும். அன்பர்கள் தேவார இன்னிசை கேட்டு மெய்ஞ்ஞானம் பெறுவாராக!

திருநெறிய தெய்வத் தமிழ் ஓதும் திருமுறைவாணர்கள்:

1. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்
   திரு. T. M. விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள், திருவாவடுதுறை.
2. திரு. P. சாமிநாத ஓதுவார், ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், சுசீந்திரம்.
3. திரு. S. A. கோபாலன், வேய்ங்குழல், திருப்பனந்தாள்.
4. திரு. கோ. வேங்கடராமன், மிருதங்கம், திருப்பனந்தாள்.

ஆச்சிராமம்,
8—12—73.

ஆணைப்படி
பா. கனகசபாபதிப்பிள்ளை,
ஏஜெண்டு, ஸ்ரீ காசிமடம்.

சுசீந்திரத்தில் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நடத்தப்பெறும் தருமங்கள்:—

1. 3-ம் திருநாள் மண்டகப்படி 1—1—1974
2. 7-ம் திருநாள் மண்டகப்படி (குமரக்கோயில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு)
3. 1 முதல் 7 திருவிழா நாட்களில் வேதபாராயணமும் பிராம்மண போஜனமும்
4. 8, 9, 10-ம் திருவிழா நாட்களில் தேவாரத் திருமுறை
   கோஷ்டி 6, 7, 8—1—1974

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் கன்னியாகுமரி வகையரு இடங்களில் நடத்தியருளும் தருமங்கள்

---

1. ஆச்சிராமம் மடம்-ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் பூஜை; ஷை மடம் பொரி நைவேத்தியம், தீபம்; ஷை மடத்தில் வைத்துச் சுசீந்திரம்கோயில் திருக்கல்யாணத்தன்று பானகம்; ஷை அய்யனூர் சிறப்பு; ஷை மடத்தில் நித்தியப் படி பத்து அந்தணர்களுக்கு அன்னம் பாலிப்பு.
2. சுசீந்திரம் – பிள்ளை மடத்தில் நித்தியபூஜை; ஸ்ரீ தாணு மாலயப்பெருமான்கோயில் நித்தியவழிபாடு; ஷைகோயில் பிரதோஷம், ஷை கோயில் மார்கழித் திருவிழா 3-ந் திருநாள், 7-ந்திருநாள் மண்டகப்படி; தேவாரகோஷ்டி; ஷை திருவிழாவில் பிராமண போஜனம், மகேசுவர பூசை; ஷை கோயிலில் நித்தியப்படி திருமுறை ஓத ஓதுவார்; ஷை கோயில் சித்திரைத் திருவிழாவில் பிராமண போஜனம், மகேசுவர பூசை, தேவார கோஷ்டி; தேவார பாடசாலை ஆண்டுவிழாவில் சிறந்த பேச்சாள ருக்கும் தேவார மாணவர்கட்கும் பரிசு.
3. தரிசனம் கோப்பு - மடம் பூசை; ஷை கோயில் 5-ம் திருநாள் மண்டகப்படி; ஷை திருவிழாவில் பிரசங்கம்.
4. சிறமடம் – பூஜை: 13 கிருத்திகை நாட்களிலும் சிறப்பு வழிபாடு.
5. அழகியபாண்டியபுரம் - கோயில் பூசை; தீபத்தெண் ணெய்.
6. நாகர்கோயில் – இந்துக் கல்லூரியில் 5 பேருக்கு உத வித்தொகை.
7. கன்னியாகுமரி - வைகாசிப் பெருவிழாவில் பிராமண போஜனம், மகேசுவர பூசை; ஸ்ரீகன்னியாகுமரி அம்மன் தை ஆடிச் சிறப்பு; ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம்பாலிப்பு.

மருவுந் துடியுடன் மன்னிய வீச்சும்
அருவும் அபயம் அனலுடன் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமமென வோதே. — திருமந்திரம்

உ
சிவ சிவ
சிதம்பரத்தில்

தேர்த்திருவிழா திருப்பல்லாண்டுஓதுதல்

7—1—1974 திங்கட்கிழமை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் ஆணையின் வண்ணம் சிதம்பரத்தில் தேர்த்திரு விழாவில் சேந்தனுர் அருளிய திருப்பல்லாண்டு ஓதப்பெறும்.

திருப்பல்லாண்டு ஓதும் திருமுறைவாணர்கள்:

1. திரு. M. கனகசபைப் பிள்ளை, சிதம்பரம்.
2. திரு. M. சுப்பிரமணிய முதலியார்,
   தேவார ஆசிரியர், திருப்பனந்தாள்.
3. ஆடல்மாமணி திரு. S. சட்டைநாத முதலியார்,
   திருமுறைப்பணி திருப்பனந்தாள்.
4. தேவாரமணி, திரு. ஆ. சட்டையப்பன், சிதம்பரம்.

வையத்து வாழ்வீர்காள் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுவீராக!

திருப்பனந்தாள்
7—1—1974

BY ORDER OF HIS HOLINESS
M. இராமலிங்கம்
ஏஜெண்டு, ஸ்ரீ காசிமடம், சிதம்பரம்.

திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா

தேர்மலி விழாவிற் குழலொலி தெருவில் கூத்தொலி ஏத்தொலி ஓத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப் பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில விலயத் திருநடத் தியல்பிற் றிகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா
வார்மலி முலையாள் வருடிய திரண்மா மணிக்குறங் கடைந்த தென்மதியே.

சேந்தனுர் அருளிய திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

1. மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமடவாள் உமைகோன் அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

2. மிண்டுமனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங்கடந்தபொருள் அளவில்லதோர் ஆனந்தவெள்ளப்பொருள்
பண்டு மின்றும் என்றுமுள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

3. நிட்டையி லாவுடல் நீத்தென்னை யாண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து

அட்டமூர்த்திக்கென் அகம்நெக வூறும் அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

4. சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட் டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பஎன் னுயிராண்ட கோவினுக் கென்செயவல்ல
கரந்தும் கரவாத கற்பக னாகிக் கரையில் கருணைக் கடல் [மென்றும்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

6. சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மா லெங்கும் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதைஎன் ஆர்வத் தனத்தினை அப்பனை யொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

7. சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறுத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

8. சேலும்கயலும் திளைக்குங்கண்ணார் இளங்கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

9. பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

10. தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்வண்டத்தொடு முடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

11. குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி மிகுதிரு வாரூரில்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரோடுங் கூடி எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

12. ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

13. எந்தை எந்தாய் சுற்றம்முற்றும் எமக்கமு தாம்எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார் அடிநாயன் செப்புரை
அந்தமில் ஆனந்தச்சேந்தன் எனைப்புகுந்தாண்டுகொண்டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே யென்று பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் 'திருமுறை வெளியீடுகள்'

		ரூ. பை.
1	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர்குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3 50
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ...	0 41
3	,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ...	0 20
4	,, மதுரைக்கலம்பகம் ,, ...	0 40
5	,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ...	0 60
6	திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் ...	2 70
7	திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ...	1 25
8	திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ...	0 50
9	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1 00
10	பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1 00
11	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ...	0 50
12	,, மூலம் ...	0 10
13	நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் ...	0 15
14	கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ...	0 10
15	கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு) ...	0 05
16	அபிராமிபந்தாதி மூலம் ...	0 15
17	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	4 25
18	திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	2 75
19	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ...	1 75
20	திருவாசகம் (மூலம்) ...	0 75
21	திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ...	3 50
22	9–ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ...	0 15
23	,, ,, தெளிவுரை ...	1 50
24	திருமந்திரம் (மூலம்) புதிய பதிப்பு ...	2 50
25	பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ...	2 50
26	பேராயிரப் பனுவல்கள் ...	0 10
27	திருத்தொண்டர் புராணசாரம் ...	0 40
28	அம்மையார் அற்புதத் திருவந்தாதி ...	0 25
29	திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ...	0 50
30	திருக்கயிலைத் திருமுறை ...	0 37
31	பழமொழித் திருமுறை ...	0 25
32	அப்பர்விழா வெளியீடு ...	0 25
33	Hymns and Proverbs ...	0 35
34	திருவாரூர்-திருப்பனுவல்கள் ...	0 10

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No 1485/57.

Regd No. M. 5574

35	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும்	...	0 30
36	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1 75
37	திருவாசகம் தேனும் கனியும்	...	0 15
38	தேவாரம் பாடும்பயன்	...	0 15
39	காசிக்கலம்பகம் உரை நடை	...	0 15
40	தாழைத் திருமுறை	..	0 15
41	ஐந்து நீதி நூல்கள்	..	0 10
42	நவக்கிரகமாண்பு	..	0 25
43	ஸ்ரீ சைலம்	...	0 10
44	திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள்	...	0 37
45	திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி	...	0 10
46	செந்திலாண்டவன் மகிமை	...	0 15
47	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு)	...	2 00
48	திருமுருகாற்றுப்படை	..	0 15
49	தேவார வைப்புத்தல விளக்கம்	...	0 15
50	திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது)	...	2 00
51	திருக்குறள் மூலம்	...	0 25
52	திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை	..	0 20
53	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	..	0 13
54	முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை)	..	0 60
55	திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும்	..	1 50
56	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2 50
57	திருக்குறள்-காமத்துப்பால் ,,	..	1 00
	ஷ 53, 54, 55 திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00
58	கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன்	...	1 25
59	திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன்	..	1 00
60	சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
61	அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு)	...	0 50
62	மங்கலம்	..	0 20
63	திரு ஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும்	..	0 20
64	கோதனத் திருமுறை	..	0 10
65	தோடுடைய செவியன் கோவண ஆடையன்	...	0 15
66	பண்டார மும்மணிக்கோவை உரை நடை	...	0 15
67	மகேசுவரபூசை	...	0 15
68	கந்தர் அநுபூதி-சுவாமிமலை கும்பாபிஷேக நினைவு மலர்	...	0 10
69	திருவிசைப்பா தேனும் கனியும்	...	0 10

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்**
2. **"தியாகராஜ விலாசம்"** 53. பிள்ளையார் கோவில் தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் -73.